இரு மலர்கள்

279

பிரேம்சந்த் எழுதியது 279

கா. ஸ்ரீ. ஸ்ரீ. மொழிபெயர்ப்பு

15 NOV 1946
MADR

அல்லயன்ஸ்

வெளியீடு

பிரேம்சந்தின் சிறந்த சிறுகதைகள்

கா. ஸ்ரீ. ஸ்ரீ.

மொழிபெயர்த்தது

"கதை! கதை! கதை! என்ன கதை வேண்டியிருக்கிறது எப்போது பார்த்தாலும்?" என்று கதையில் சலிப்படைந்தவர்கள்கூட, விம்மி எழும்பும் ஆவலோடும், துள்ளும் மனத்தோடும் படிக்கவேண்டிய கதைகள் இதோ இருக்கின்றன. இவற்றைப் படித்த பின்பு, "பேஷ், கதைகளென்ருல் இப்படியல்லவா இருக்கவேண்டும்!" என்று அவர்கள் வாய் பேசும்.

உங்களுக்கு எந்தமாதிரியான கதை வேண்டும்? வறுமைக் கனலில் பண்பட்ட ஒரு சிறுவனின் இளைய உள்ளம் செய்யும் தியாகமும், அன்னை தன் குழந்தையினிடத்தில் எதிர்பார்த்த ஆசை நிறைவேருமல் உள்ளம் உடைந்து மடியும் சோக நாடகமும் உங்கள் உள்ளத்தை உருக்கும். புல்லு விற்கப்போய், தன் மாயாஜாலங்களில் முரட்டு ஆடவர்களை மயக்கியும், மனத்திண்மையோடு நிலை தவருமலிருக்கும் புல்லுக்காரியின் கதை உங்களை ஒரு கலக்குக் கலக்கும். 'மார்கழி இரவு' என்ற கதையைப் படிக்கும்போது மார்கழிக் குளிரை நீங்களே உணர்வீர்கள். ஒரு பெண்மணி தன் அப்பாவிக் கணவனைப்பற்றிக் குறை கூறும் மிகவும் வேடிக்கையான குண சித்திரத்தை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? கசந்துபோன தினசரி வாழ்க்கையில் உங்களுக்கு ஹாஸ்யம் வேண்டுமல்லவா? அப்படியானுல் 'மண்டைக் கிறுக்கு' என்ற கதையைப் படியுங்கள். இப்படிப் பல ரஸங்களோடுகூடிய பத்துக் கதைகள் கொண்ட இந்தக் கனித்திரட்டைச் சுவைத்துப் பாருங்கள்.

——— ரூ. 3—0—0 ———

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை

இரு மலர்கள்

ராணி ஸாரந்தா
தைமூரின் உள்ளம்

பிரேம்சந்த்

மொழிபெயர்ப்பு:
கா. ஸ்ரீ. ஸ்ரீ.

894.8113

OFFICE OF THE REGISTRAR ...
15 NOV 1945
MADRAS

அறிவே விளக்கு
அல்லயன்ஸ்

அல்லயன்ஸ் கம்பெனி
மயிலாப்பூர் : : சென்னை

காபிரைட்] [ரூ. 1/-

081,3

பிரேம்சந்தின் இதர நூல்கள்

நாவல்கள் :

ஸேவாஸதனம் ... ரூ. 2—0—0
நிர்மலா ...

சிறுகதைகள் :

பிரேம்சந்தின் சிறந்த சிறுகதைகள் } ரூ. 3—0—0
பிரேம பஞ்சமி ... ரூ. 2—0—0

இவையும், பங்கிம்சந்திரர், மகாகவி ரவீந்திரர், சரத்சந்திரர் முதலிய பிரபல ஆசிரியர்களின் நூல்களும், சிந்தனையைத் தூண்டும் பல உயர்தரத் தமிழ் நாவல்களும், சிறுகதைத் தொகுதிகளும் எங்களிடம் கிடைக்கும். எங்கள் சந்தாதார்களுக்கு மாத்திரமே புத்தக விலைகளில் சிறிது கழிவு செய்து கொடுக்கப்படும்.

Printed by Sadhu Press, Madras, Q. H. No M. S. 115
for the Alliance Company, Madras
Q. H. No. M. S. 109—3rd Edition-1,000 Copies-16-10-45

மண விருந்து

இருபதாம் நூற்ருண்டின் முதல் பாதத்தில் உலகம் கண்ட மூன்று இந்தியக் கதாசிரியர்களில் **பிரேம்சந்த்** ஒருவர். ஹிந்தியில் அவர் நூற்றுக்கணக்கான சிறு கதைகளும், பல நாவல்களும் எழுதி, கதை இலக்கியத்தில் சக்கரவர்த்தியாக விளங்கினர். அவருடைய சிறந்த பத்து ஸமூகக் கதைகளை, ஏற்கனவே, '**பிரேம்சந்தின் சிறந்த சிறுகதைகள்**' என்ற புத்தகமாக மொழிபெயர்த்திருக்கிறேன். இந்த '**இரு மலர்கள்**' சரித்திரத் தடாகத்தில் பூத்தவை ; எழிலிலும் மணத்திலும் தன்னேரில்லாப் பெருமை கொண்டு, அவருடைய கீர்த்திமுடியை அலங்கரிப்பவை. இந்தப் பன்னிரண்டு கதைகளும் இப்போது முதல் தடவையாகத் தமிழில் வெளிவந்திருக்கின்றன. பிரேம்சந்த் என்னும் மலர்மாலை பல்வேறு சமயங்களில் அளித்த ஸுகந்தங்களின் கலவையை இங்கே அநுபவித்துக் களிக்கலாம்.

'இரு மலர்களி'ல் முதல் மலர் - அஸுரசக்திகள் வலுத்தனவாகி உலகத்தைப் போர்க்களமாக்கும் நிசிவேளையில், தன் காதலனை கருவண்டை முழு வன்மையினுலும் இருதயத்துக்குள் பொலியவைத்து, பகைவனை நிசாகரனின் முன்பு தன் மானத்தைக் காப்பதற்காகத் தானே கருகி மாய்ந்துபோகும் தாமரை. மற்ருென்று - நேற்றுக் கடுங் கிரணங்களோடு மத்தியான்ன ஸூரியனுக இருந்தவனே, இன்று, காலைத் தண் கதிரோனுக்கி, அவனுக்கும் தனக்கும் மகிழ்ச்சியும் மலர்ச்சியும் தோன்றவைக்கும் தாமரை மலர்.

ராணி ஸாரந்தா, ஒரு குதிரைக்காக - தன் மானத்துக்காக - விஸ்தீர்ணம் மிகுந்த ஜாகிரையும், உயர்ந்த ராஜபதவியையும், ராஜசம்மானத்தையும் கைவிட்டாள் ; அது மாத்திரம் அன்று ; எதிர்காலத்துக்கும் முட்களை விதைத்தாள். கணவனுக்காகத் தன் உயிரையும் திருணமாக மதித்த மங்கையே அவன் உயிரை மாய்த்தாள். எந்த இருதயத்தின் ஆலிங்கனத்தைப் பெற்று அவள் தன் இளமையின்பத்தை அநுபவித்தாளோ, எந்த இருதயம் அவளுடைய விருப்பங்களுக்குக் கேந்திரமாக இருந்ததோ, எந்த இருதயம் அவளுடைய பெருமையை வளர்த்துவந்ததோ, அதே

இருதயத்தை ஸாரந்தாவின் வாள் பிளக்கச்செய்தது. வேறு எந்தப் பெண்ணின் வாள் இந்த வேலையைச் செய்திருக்கிறது !

தைமூரின் சரித்திரம், சரித்திரத்தில் ஒரு கரும் புள்ளி, ஒரு கறை. "தைமூர் குரூரமே உருவெடுத்த ராக்ஷஸன். அவன் செய்த படுகொலைகளின் பயங்கரத்தால், 'கடவுளின் சவுக்கு' என்று பெயரெடுத்தவன். அவன் முகம்மதியனாக இருந்தும், கொலைபுரிவதிலும் சூறையாடுவதிலும் மத வித்தியாசத்தைப் பாராட்டவில்லை" என்பது சரித்திரம்.

ஆனால், உண்மையில் தைமூரின் உள்ளத்தில் அன்பு இல்லையா? அநுதாபம் இல்லையா? உணர்ச்சி இல்லையா? எல்லாம் இருந்தன. நாளடைவில், ஸாம்ராஜ்யக் கொள்கையையே அவன் வெறுத்தான்; 'எந்தச் சமூகத்துக்கும் - எந்த மனிதனுக்கும் - மற்றொரு சமூகத்தின் மீது ஆட்சி செலுத்த உரிமை இல்லை' என்ற முடிவுக்கு வந்தான். எப்படி? அதைத்தான் விளக்குகிறது இரண்டாவது கதை.

'ஹம்ஸ்' பத்திரிகையை அகில பாரதீய ஸாஹித்யப் பத்திரிகையாக மாற்றிய பொழுதிலிருந்து பிரேம்சந்த் அவர்களோடு எனக்குத் தொடர்பு தொடங்கியது. அவர் காலம் சென்றபின்பு, அவருடைய மூத்த புதல்வர் ஸ்ரீபத்ராய் அவர்கள் என் இலக்கியத் தொண்டுக்குப் பல வகைகளில் உதவி புரிந்துவருவதோடு, ஒரு பரிவாரத்தினர்போலவே பழகிவந்திருக்கிறார். பிரேம்சந்தின் இந்தக் கதைகளை வெளியிடும் விஷயத்திலும் அவர் அன்போடு அநுமதி தந்து உதவியிருக்கிறார்.

இந்தக் காகிதப் பஞ்ச காலத்திலும் இந்தப் புத்தகத்தை மூன்றும் முறையாக இவ்வளவு வசீகரமாக வெளியிட்டிருக்கும் அல்லயன்ஸ் கம்பெனியாரின் ஆர்வம் பாராட்டத்தக்கது.

இந்த மண விருந்தைச் சுவைக்கும் அன்பர்களின் அபிப்பிராயங்களை அன்போடும் ஆதரவோடும் உவகையோடும் ஏற்றுக்கொள்வேன்.

கா. ஸ்ரீ. ஸ்ரீ.

ராணி ஸாரந்தா

1

காரிருளின் நிச்சப்தத்தில் தஸான் நதி, பாறைகளில் மோதி, 'கிர்ர், கிர்ர்' என்று சுற்றும் கல்லியந்திரத்தின் ஓசைபோன்ற மனோகரமான ஒலியோடு ஓடிக்கொண்டிருக்கிறது. நதியின் வலப்பக்கத்தில் ஒரு குன்று. அதன்மீது ஒரு பழைய கோட்டை காணப்படுகிறது. காட்டுமரங்கள் அதை மறைத்துள்ளன. குன்றுக்குக் கிழக்கே ஒரு சிறு கிராமம் இருக்கிறது. இந்தக் கோட்டையும் கிராமமும் ஒரு புந்தேலிய வீரனின் கீர்த்திக்கு அழியாத அடையாளங்களாயிருக்கின்றன. எத்தனையோ நூற்றாண்டுகள் கழிந்துபோயின; புந்தேல் கண்டில் எத்தனையோ அரசாங்கங்கள் உதித்து அஸ்தமித்தன; முகம்மதியர்களும் வந்து போனார்கள்;

புந்தேலிய அரசர்கள் எழுந்தனர், வீழ்ந்தனர் ; சீர்கேடு களுக்கு இலக்காகாத ஒரு கிராமமோ அல்லது ஒரு பிர்க்காவோ இதற்கு அக்கம்பக்கத்தில் இல்லை ; ஆனால் இந்தக் கோட்டையின்மீது மட்டும் எந்த எதிரியின் வெற்றிக்கொடியும் பறந்ததில்லை ; இந்தக் கிராமத்தில் மாத்திரம் எவ்விதப் புரட்சியும் தலையெடுக்கவில்லை. இதுதான் இவைகள் பெற்ற பெரும் பேறு.

அநிருத்தசிம்மன் வீரனான ராஜபுத்திரன். ஒவ்வொரு மனிதனும் தன் தோள்வலியையும் பராக்கிரமத்தையுமே நம்பவேண்டியிருந்தது அந்தக் காலத்தில். ஒருபுறம் முகம்மதியர்களின் சேனைகள் கால்களையூன்றி நின்றன ; மறுபுறம் பலசாலிகளான அரசர்கள், பலவீனர்களான தம் சகோதர அரசர்களை வீழ்த்தி மடிப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். அநிருத்தசிம்மனிடம் குதிரைப் படைகளும் காலாட்களும் அடங்கிய, சிறிய ஆனால் ஜீவனுள்ள, ஒரு சேனைக்கூட்டம் இருந்தது. அவன் அதைக்கொண்டு தன் குலத்தையும் மரியாதையையும் காத்துவந்தான். அவனுக்கு ஒரு நிமிஷம் சந்தோஷமாக இளைப்பாறப் பொழுதேது ? மூன்று வருஷங்களுக்கு முன்பு அவனுக்கும் சீதலா தேவிக்கும் திருமணம் நிகழ்ந்தது ; ஆனால் அவன் இளமை விளையாட்டுக்குரிய பகல்களையும், கேளிக்கைகளுக்குரிய இரவுகளையும் மலைச்சாரல்களில் கழிப்பான் ; சீதலா அந்தப் பகல்களையும் இரவுகளையும் அவன் உயிர்நலத்தைக் கோரிக்கொண்டே கழிப்பாள். அவள் எத்தனையோ தடவை கணவனை வேண்டினாள் ; எத்தனையோ தடவை அவன் கால்களில் விழுந்து, "இனி நீங்கள் என் கண்களை விட்டு அகலாதீர்கள்.

நாம் இருவரும் ஹரித்துவாரத்துக்குப் போய்விடுவோம், வாருங்கள்! நான் உங்களோடு வனவாசம் செய்வதும் நன்று. இந்தப் பிரிவுநோயை இனி என்னால் பொறுக்க முடியாது" என்று சொல்லி அழுதாள். அவள் இதை அவனிடம் அன்போடு சொன்னாள்; பிடிவாதத்தோடு சொன்னாள்; வணக்கத்தோடு கெஞ்சினாள். ஆனால் அநிருத்தன் புந்தேலிய வீரனல்லவா? சீதலா தன்னுடைய எந்த ஆயுதத்தாலும் அவனைத் தோற்கடிக்க முடியவில்லை.

2

எங்கும் ஒரே இருள்மயமான இரவு. உலகம் முழுதும் தூங்கிக்கொண்டிருந்தது, ஆனால் ஆகாயத்தில் நட்சத்திரங்கள் ஓடிக்கொண்டிருந்தன. சீதலா கட்டிலில் படுத்து, இந்தப் புறமும் அந்தப் புறமுமாகப் புரண்டுகொண்டிருந்தாள். அவள் நாத்தனார் ஸாரந்தா கீழே தரையில் உட்கார்ந்து இனிய குரலில், "**என் கண்ணனின்றி இந்நீளிரவைக் கழிக்கும் வகையேன்? தோழீ!**" என்று பாடிக்கொண்டிருந்தாள்.

"வீணாக என் வயிற்றெரிச்சலைக் கிளப்பாதேயுங்கள், அக்கா! உங்களுக்கும் தூக்கம் வரவில்லையா என்ன?" என்றாள் சீதலா.

"இதோ நான் உனக்குத் தாலாட்டுப் பாடுகிறேன்; தூங்கு."

"என் கண்களிலிருந்துதான் தூக்கமென்பதே போய்விட்டதே!"

"அது யாரையாவது தேடப் போயிருக்கும்!"

ஸாரங்தா இதைச் சொல்லி வாய் மூடுவதற்குள் வாசற்கதவு திறந்தது; தேகக் கட்டுள்ள ஓர் அழகிய இளைஞன் உள்ளே வந்தான். அவன்தான் அநிருத்தன். அவன் துணிகள் நனைந்திருந்தன; கையில் ஓர் ஆயுதங் கூட இல்லை. சீதலா கட்டிலிலிருந்து இறங்கிக் கீழே தரையில் உட்கார்ந்தாள்.

"என்ன அண்ணா, துணிகள் ஏன் இப்படி நனைந் திருக்கின்றன?" என்று கேட்டாள் ஸாரங்தா.

"ஆற்றைக் கடந்து வந்தேன்."

"போருக்காக எடுத்துச் சென்ற ஆயுதங்கள் என்ன ஆயின?"

"அவைகளை எதிரிகள் கொண்டனர்."

"உன்னோடு சென்ற மனிதர்கள் எங்கே?"

"எல்லோரும் வீரகதி அடைந்தார்கள்."

சீதலா அடக்கமான குரலில், "ஆண்டவன்தான் காப்பாற்றினான்!" என்றாள். ஆனால் ஸாரங்தாவின் புருவங்கள் நெறித்தன; அவளுடைய முகமண்டலத்தில் கர்வத்தின் ஒளி வீசியது. அவள் கோபத்தோடு, "அண்ணா, நீ நம் குலத்தின் மேன்மையைப் போக்கடித்துவிட்டாய். இப்படி எப்போதுமே நடந்ததில்லை!" என்றாள்.

ஸாரங்தா தன் அண்ணனை உயிரிலும் மேலாக மதித்துவந்தாள். அவள் வாயிலிருந்து வெளிவந்த அந்த நிந்தனைச் சொற்களைக் கேட்டு, அநிருத்தனின் மனம் வெட்கத்தாலும் வருத்தத்தாலும் கலங்கியது. காதலினால் க்ஷணநேரம் மறைக்கப்பட்டிருந்த அவனுடைய அந்த வீரத் தழல் மீண்டும் கொழுந்துவிட்டு

எரியலாயிற்று. அவன் வந்தவாறே திரும்பினன்; "ஸாரந்தா, நீ என்னை எப்போதைக்குமாக, தட்டி எழுப்பிவிட்டாய்! இதை நான் இனி எப்போதும் மறக்கமாட்டேன்" என்று சொல்லிவிட்டு வெளியே போனன்.

இருளடர்ந்த இரவு. ஆகாய மண்டலத்தில் தாரகைகளின் ஒளி மிகவும் மங்கலா யிருந்தது. அநிருத்தன் கோட்டையிலிருந்து வெளியே வந்தான்; ஒரு நொடியில் ஆற்றின் அக்கரைக்குச் சென்று, மீண்டும் இருளில் மறைந்தான். சீதலா அவன் பின்னலேயே கோட்டைச் சுவர்கள் வரையிலும் வந்தாள்; ஆனல் அநிருத்தன் ஒரே தாவாகத் தாவி, வெளியே நதியில் குதித்ததும், அந்த விரஹிணி ஒரு பாறைமீது உட்கார்ந்து அழலானுள்.

இதற்குள் ஸாரந்தாவும் அங்கே வந்துசேர்ந்தாள். சீதலா பெண்நாகமெனச் சீறி, "குலத்தின் மேன்மையில் உங்களுக்கு இவ்வளவு பிரியமா?" என்ருள்.

"ஆம்."

"உங்கள் கணவராயிருந்தால், நீங்கள் அவரை மார்பிலணைத்து மறைத்துக்கொண்டிருப்பீர்கள்!"

"ஒருபோதும் இல்லை! என் கணவனுயிருந்தால் அவன் மார்பில் கத்தியைச் செருகியிருப்பேன்!"

சீதலா முறுக்கோடு, "முன்ருனையால் மறைத்துக் கொண்டு திரிவீர்கள்; என் வார்த்தையை இப்போதே முடிபோட்டு வைத்துக்கொள்ளுங்கள்!" என்ருள்.

ஸாரந்தா, "அந்த மாதிரியான நாள் வந்தால், நானும் என் வார்த்தையை நிறைவேற்றிக் காட்டுவேன்" என்ருள்.

இந்தச் சம்பவம் நடந்து மூன்று மாதங்களுக்கு அப்புறம், அநிருத்தன் மதரௌனவை ஜயித்துத் திரும்பிவந்தான். ஒரு வருஷத்துக்குப் பின்பு, ஸாரந்தா ஓர்ச்சா நாட்டதிபனான சம்பத்ராயை மணந்து கொண்டாள். ஆனால் அன்று நடந்த பேச்சுக்கள் மட்டும் இரு பெண்களின் உள்ளத்திலும் முள்போல் உறுத்திக்கொண்டிருந்தன.

3

ராஜா சம்பத்ராய் மிகவும் பராக்கிரமசாலியான மன்னர். புந்தேலிய ஜாதி முழுதுக்கும் அவரென்றால் உயிர்; அவர் ஆதிக்கத்தை அது ஒப்புக்கொண்டதற்குக் கேட்கவேண்டுமா? சிம்மாசனத்தில் அமர்ந்ததுமே, அவர் மொகலாயச் சக்கரவர்த்திகளுக்கு வரி கொடுப்பதை நிறுத்தினார்; தம் தோள்வலியால் ராஜ்யத்தையும் பரப்பலானார். முகம்மதியச் சேனைகள் அடிக்கடி அவரைத் தாக்கின; ஆனால் தோல்வியுற்றுத் திரும்பின.

இதே தருணத்தில்தான் அநிருத்தன் ஸாரந்தாவைச் சம்பத்ராய்க்கு மணம் புரிவித்தான். ஸாரந்தாவுக்குக் கேட்ட வரம் கிடைத்தது. 'என் கணவர் புந்தேலிய குலத்துக்குத் திலகமாய் விளங்கவேண்டும்' என்ற அவளுடைய அபிலாஷை நிறைவேறியது. அரசரின் அந்தப்புரத்தில் ஐந்து ராணிகள் இருந்த போதிலும், தம்மை உள்ளத்தில் வைத்துப் பூஜிக்கும் தேவி ஸாரந்தா ஒருத்திதான் என்பது அவருக்கு விரைவிலேயே தெரிந்தது.

ஆனால், சம்பத்ராய் மொகலாயச் சக்கரவர்த்திக்குப் பணியும்படியான சில சம்பவங்கள் நிகழ்ந்தன. அவர் தமது ராஜ்யத்தைத் தம் தம்பியான பஹாட்சிம்ம னிடம் ஒப்பித்துவிட்டு டில்லிக்குப் போனார். இது ஷாஜஹானின் ஆட்சிக் காலத்தின் கடைசிப் பகுதி. ராஜகுமாரன் தாராஷிகோஹ் அப்போது அரசாங்கக காரியங்களை நிர்வகித்து வந்தான். யுவராஜனின் கண்களில் நல்லொழுக்கமும், மனத்தில் தாராளத் தன்மையும் விளங்கின. அவன் சம்பத்ராயின் வீரத் தைப் பற்றிய பல சரிதங்களைக் கேட்டிருந்தா னுகையால், அவரைப் பெரிதும் மதித்துச் சம்மானம் செய்து, வருஷத்தில் ஒன்பது லட்சம் வரும்படியுள்ள 'கால்பீ' என்ற அருமையான ஜாகீரை அவருக்குப் பரிசாகத் தந்தான். அப்போதுதான் முதல் தடவை யாக, சம்பத்ராய்க்குப் போர்களிலிருந்தும் சண்டை சச்சரவுகளிலிருந்தும் ஓய்வு கிடைத்தது. அதோடு கூடவே போகவிலாஸங்களும் பிரபலமாயின. இரவும் பகலும் உல்லாசம், கேளிக்கை; அவைகளைப்பற்றியே பேச்சு! அரசர் சுகபோகங்களில் ஆழ்ந்திருந்தார்; ராணிகள் நவரத்தினங்களிழைத்த நகைகளில் ஆசை வைத்தார்கள்; ஆனால் அந்நாட்களிலெல்லாம் ஸாரந்தா மிகவும் சோர்வுற்றும் கலகலப்பின்றியும் இருந்தாள். அவள் அந்த ரகசியங்களினின்றும் தொலைவில் விலகி யிருந்தாள்; அந்த நாட்டியக் கச்சேரிகளும், சங்கீத சபைகளும் அவளுக்குச் சூனியமாகத் தோற்றின!

ஒரு நாள் சம்பத்ராய் ஸாரந்தாவிடம், "என்ன ஸாரந்தா, நீ ஏன் எப்போது பார்த்தாலும் இப்படி முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டு இருக்கிறாய்?

எப்போதுமே நீ சிரித்து நான் பார்த்ததில்லை. உனக்கு என்மேல் கோபமா?" என்று கேட்டார்.

ஸாரந்தாவின் கண்களில் நீர் நிரம்பிவந்தது. "நாதா, நீங்கள் ஏன் இப்படி யோசிக்கிறீர்கள்? நீங்கள் மனக் களிப்போடு இருக்கும் இடத்தில் நானும் சந்தோஷமாகத்தான் இருக்கிறேன்" என்றாள்.

"நான் இங்கே வந்ததிலிருந்து உன் தாமரை வதனத்தில் மனோகரமான புன்முறுவலை எப்போதுமே பார்க்கவில்லை. நீ எப்போதும் உன் கையால் வெற்றிலை பாக்கு 'பீடா' கொடுக்கவே இல்லை. எனக்குத் தலைப்பாகை அணிவிக்கவில்லை. என் மேனியை ஆயுதங்களால் அலங்கரிக்கவில்லை. ஒரு வேளை காதற்கொடி வாடிப்போய்க்கொண்டிருக்கிறதா என்ன?"

"பிராணநாதா, என்னிடம் பதிலே இல்லாத சில கேள்விகளை நீங்கள் கேட்கிறீர்கள்! உண்மையில், இப்போதெல்லாம் என் மனம் சிறிது சோர்வுற்றுத் தான் இருக்கிறது. சந்தோஷமாக இருக்கவேண்டு மென்று நான் எவ்வளவோ விரும்பியுங்கூட, என் உள்ளத்தில் ஏதோ ஒரு பெரிய பாரம் வைத்திருப்பது போல் தோற்றுகிறது."

சம்பத்ராய் தமக்குள் ஆனந்தத்தில் ஆழ்ந்திருந் தார்; ஆகவே அவர் சிந்தனைக்கு எட்டியவரையில், ஸாரந்தா சந்தோஷமின்றி இருப்பதற்குத் தகுதியான காரணம் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. அவர் புருவத்தைச் சுளித்து, "நீ சோர்வுற்று இருப்பதற்கு விசேஷமான காரணம் ஒன்றும் இருப்பதாக எனக்குத்

தெரியவில்லை. ஓர்ச்சாவில் இங்கே இல்லாத சுகம் என்ன இருந்தது ?" என்று கேட்டார்.

ஸாரந்தாவின் முகம் சிவந்தது. "நான் ஏதாவது சொன்னால் நீங்கள் கோபித்துக்கொள்ளமாட்டீர்களே ?" என்றாள்.

"இல்லை ; நீ சந்தோஷமாகச் சொல்லு."

"ஓர்ச்சாவில் நான் ஓர் அரசருக்கு ராணியாய் இருந்தேன் ; இங்கே நான் ஒரு ஜாகீர்தாரின் வேலைக்காரி. ஓர்ச்சாவில் நான் அயோத்தியில் கோசலை போல இருந்தேன் ; ஆனால் இங்கே நான் பாதுஷாவின் ஒரு சேவகனுக்கு மனைவி. எந்தப் பாதுஷாவின் முன்பு இன்று நீங்கள் மரியாதையோடு தலை குனிக்கிறீர்களோ, அவன் நேற்று உங்கள் பெயரைக் கேட்டு நடுங்கிக்கொண்டிருந்தான். ராணியிலிருந்து வேலைக்காரியாக மாறியுங்கூட மனத்தைச் சந்தோஷமாக வைத்துக்கொள்வது என் வசத்தில் இல்லை. நீங்கள் இந்தப் பதவியையும், இந்தப் போகப் பொருள்களையும் மிகவும் அருமையான விலைகொடுத்து வாங்கியிருக்கிறீர்கள்."

சம்பத்ராயின் கண்களை மூடியிருந்த திரை விலகியது. அவர் இதுவரையிலும் ஸாரந்தாவின் ஆத்மிக உயர்வை அறிந்திருக்கவில்லை. பெற்றோர்களற்ற பாலகன் தன் தாயைப் பற்றிய பேச்சைக் கேட்டதும் அழுவதுபோல, ஓர்ச்சாவின் ஞாபகத்தால் சம்பத்ராயின் கண்களில் நீர் ததும்பியது. அவர் மரியாதையோடு கூடிய அன்போடு ஸாரந்தாவை மார்போடு அணைத்துக்கொண்டார்.

செல்வமும் புகழும் சம்பாதிக்க வேண்டுமென்ற எண்ணங்கள் அவரை எந்த இடத்திலிருந்து இங்கே டில்லிக்குக் கொண்டு வந்தனவோ, அந்தப் பாழாய்ப் போன ஊரைப்பற்றிய கவலை அன்றையிலிருந்து அவரை மீண்டும் பிடித்துக்கொண்டது.

4

இழந்த சேயைத் திரும்பவும் பெற்ற தாய்போல, சம்பத்ராயின் வருகையால் புந்தேல்கண்ட் பேருவகை கொண்டது. ஓர்ச்சாவின் பாக்கியத் தெய்வம் கண் விழித்தது. பறைகளும் முரசங்களும் ஒலித்தன. ஸாரந்தாவின் கமலக் கண்களில் மீண்டும் குலப் பெருமையின் ஒளி வீசியது.

இப்படியே பல மாதங்கள் கழிந்தன. இதனிடையே ஷாஜஹான் நோய்வாய்ப்பட்டார். ஏற்கனவே ராஜ குமாரர்களுக்குள் பொறாமைத் தீ மூண்டிருந்தது. இந்தச் செய்தியைக் கேட்டதும் ஜ்வாலை கொழுந்து விட்டெரிந்தது. போருக்கான ஆயத்தங்கள் செய்யப் பட்டன. ராஜகுமாரர்களான முராதும், முஹிஉத்தீனும் தத்தம் சேனைகளைத் திரட்டிக்கொண்டு தக்ஷிணத்திலிருந்து புறப்பட்டார்கள். அப்போது மழை நாட்கள். செழிப்பான நிலங்கள் விதவிதமான பன்னிற உருவங்களோடு தம் அழகை எடுத்துக் காட்டின.

முராதும் முஹிஉத்தீனும் உற்சாகம் நிரம்பியவர்களாய் முன்னேறிச் சென்றனர். அவர்கள் தௌலபுருக்கருகே சம்பல் நதிக்கரைவரையிலும் யாதொரு தடையுமின்றி வந்து சேர்ந்துவிட்டார்கள்; ஆனால்

அங்கே பாதுஷாவின் சேனை தம் நல்வரவுக்காகக் காத்திருப்பதைக் கண்டார்கள்.

அப்போது இளவரசர்கள் பெரிதும் சிந்தையில் ஆழ்ந்தனர். எதிரே கடக்க முடியாத நதி, பேராசையைக் காட்டிலும் அதிக விஸ்தாரமுள்ளதாக, அலைகளை வீசிக்கொண்டிருந்தது. நதித்துறையில் கோட்டையின் இருப்புச் சுவர், யோகிராஜனின் தியாகத்தைப்போல் மிகவும் உறுதியாக நின்றிருந்தது. அவர்கள் வேறு வழியின்றி, "அல்லாவுக்காக வந்து, எங்கள் முழுகிப் போகும் படகை அக்கரை சேர்ப்பியுங்கள்" என்று சம்பத்ராய்க்குச் செய்தி அனுப்பினார்கள்,

அரசர் அரண்மனைக்குள் வந்து, "இதற்கு என்ன பதில் தரலாம்?" என்று ஸாரந்தாவைக் கேட்டார்.

ஸாரந்தா, "நீங்கள் உதவி செய்யவேண்டும்," என்றாள்.

"இவர்களுக்கு உதவி செய்வதென்பது தாராஷிகோஹின் விரோதத்தை விலைக்கு வாங்குவதுதான்!".

"நீங்கள் சொல்வது உண்மை; ஆனால் ஒருவன் கைநீட்டி உதவி கேட்கும்போது, அந்த மரியாதையையும் நாம் காத்துக்கொள்ளத்தான் வேண்டும்."

"அன்பே, நீ யோசித்துப் பதில் சொல்லவில்லை."

"என் உயிரே, இந்த வழி கடினமானதென்பதும், நாம் நம் போர்வீரர்களின் ரத்தத்தைத் தண்ணீரைப் போல் பெருகவிட வேண்டியிருக்கும் என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும். அப்படியிருந்தும், நாம் நமது ரத்தத்தைப் பெருக்குவோம்; சம்பல் ஆற்றின் அலைகளைச் செந்நிறமாக்குவோம். இந்த நதியில் நீரின்

தாரை ஓடும்வரையில், அது நம் வீரர்களின் புகழைப் பாடிக்கொண்டிருக்கும். புந்தேலியர்களின் பெயரைச் சொல்லுபவன் ஒருவனுவது இருக்கும் வரையிலும், இந்த ரத்தப் பொட்டு அவன் நெற்றியில் குங்கும திலகமாகத் திகழும். என் பேச்சை நம்புங்கள்."

வாயு மண்டலத்தில் முகிலரசனின் படைகள் குவிந்துவந்தன. ஓர்ச்சாவின் கோட்டையிலிருந்து புந்தேலியர் படை கருமுகில்போலக் கிளம்பி, வேகமாகச் சம்பலை நோக்கிச் சென்றது. ஒவ்வொரு போர் வீரனும் வீரவெறியால் ஊசலாடிக்கொண்டிருந்தான். ஸாரந்தா இரு ராஜகுமாரர்களையும் கழுத்திலணைத்துக் கொண்டாள்; அரசருக்கு வெற்றிலை 'பீடா'வைக் கொடுத்து, "புந்தேலியர்களின் மானம் இன்று உங்கள் கையில் இருக்கிறது" என்ருள்.

அன்று அவளுடைய ஒவ்வோர் அங்கமும் முறுவலித்தது; உள்ளம் மலர்ந்தது. புந்தேலியர்களின் அந்தப் படையைக் கண்டு இளவரசர்கள் பெருமிதம் கொண்டனர். அரசருக்கு அங்கே இருந்த ஒவ்வோர் அங்குல நிலமும் நன்ருகத் தெரியும். அவர் புந்தேலியர்களை ஒரு மறைவுக்குள் மறைத்து வைத்துவிட்டு, இளவரசர்களின் சேனையைக் கூட்டிக்கொண்டு, ஆற்றின் கரையோரமாகவே மேற்குப் பக்கமாகச் சென்ருர். 'எதிரி ஏதோ வேறு துறை வழியாக ஆற்றில் இறங்கப் போகிருன்' என்று தாராஷிகோஹ் தப்பாக எண்ணி, அத்துறையிலிருந்த முற்றுகையை நீக்கிவிட்டான். இத்துறையிலிருந்த புந்தேலியர்கள் இதைத்தான் எதிர்பார்த்திருந்தார்கள். அவர்கள் உடனே மறைவிடத்திலிருந்து வெளியே வந்து, தம்

குதிரைகளை ஆற்றில் இறக்கினார்கள். சம்பத்ராயும் ராஜகுமாரன் தாராஷிகோஹ் என்பவனுக்கு ஏமாற்றத்தை விளைவித்துத் தம் சேனையைத் திருப்பி, புந்தேலியர்களுக்குப் பின்னாலேயே மறுகரை வந்தடைந்தார். இந்தக் கடினமான தந்திரத்தில் ஏழு மணிநேரம் தாமதமாயிற்று; ஆனால் அவர் மறுகரைக்குச் சென்று பார்த்தபோது எழுநூறு புந்தேலிய வீரர்களின் குற்றுயிர்கள் துடித்துக்கொண்டிருந்தன.

அரசரைக் கண்டதுமே புந்தேலியர்களுக்கு மீண்டும் தைரியமுண்டாயிற்று. பாதுஷாவின் சேனையும், 'அல்லாஹோ அக்பர்' என்று கூக்குரலிட்டுத் தாக்கியது. அவர்களும் வீராவேசம் கொண்டனர். அவர்களுடைய சேனையின் வரிசைகள் சின்னபின்னமாயின. கைகலந்து போர் நிகழ்ந்தது. இதற்குள் இரவும் வந்தது. போர்நிலம் ரத்தத்தினால் சிவந்தது. ஆகாயத்தில் இருள் சூழ்ந்தது. பயங்கரமான போர் நடந்துகொண்டிருந்தது. பாதுஷாவின் சைனியம் இளவரசர்களைக் கடுமையாகத் தாக்கி அவர்கள் சேனையை அழிக்க முயன்றது. திடீரென்று மேற்கிலிருந்து மீண்டும் புந்தேலியர் அலையொன்று எழுந்தது. அதன் தாக்குதலுக்கு முன்பு பாதுஷாவின் சேனை நிற்க முடியவில்லை. வெற்றி யடைந்த நிலம் அவர்கள் கையைவிட்டுப் போயிற்று. இந்தத் தெய்விக உதவி எங்கிருந்து வந்ததென்பது ஜனங்களுக்குப் பெரிதும் ஆச்சரியமாயிருந்தது. சில அப்பாவிகள், 'இவர்கள் வெற்றித் தெய்வத்தின் தூதர்கள்! இளவரசர்களின் உதவிக்கு வந்திருக்கிறார்கள்!' என்றுகூட நினைத்தனர். ராஜா சம்பத்ராய் அருகில் சென்றதும், ஸாரந்தா

குதிரையினின்றும் இறங்கி, அவர் கால்களில் தலை கவிழ்த்தாள். 'ஸாரந்தாவா இப்படிச் செய்தாள்!' என்று அவருக்கு எல்லையற்ற ஆனந்தம் உண்டாயிற்று.

போர்க்களத்துக் காட்சி இப்போது மிகவும் துன்ப மயமாக இருந்தது. சிறிது நேரத்துக்கு முன்பு அணிகள் கொண்ட வீரர்களின் கூட்டம் இருந்த இடத்தில் இப்போது குற்றுயிரான சடலங்கள் துடித்துக்கொண்டிருந்தன. மனிதன் தனது தன்னலத்துக்காக ஆதியிலிருந்தே தன் சகோதரர்களைக் கொன்றுவந்திருக்கிறான்!

பிறகு வெற்றி பெற்ற சேனை கொள்ளையடிப்பதில் முனைந்தது. முன்பு ஆண்கள் ஆண்களோடு போர் செய்தனர்; இப்போது அவர்கள் பிணங்களோடு சண்டையிட்டனர். அது வீரத்தன்மையும் பராக்கிரமமும் நிரம்பிய சித்திரம்; இது நீசத்தன்மையும் பலவீனமும் கலந்து, வெறுப்புத் தரும் சித்திரம். அப்போது மனிதன் மிருகமானான்; இப்போது அவன் மிருகத்திற்கும் கேடு கெட்டவனானான்.

அந்தக் கொள்ளையின் போது, பாதுஷாவின் படைக்குச் சேனாபதியான வலீ-பகாதுர்கான், சாகப் பிழைக்க விழுந்துகிடந்ததை ஜனங்கள் கண்டார்கள். அவனருகே அவன் குதிரை, வாலால் ஈக்களை ஓட்டிக் கொண்டு, நின்றிருந்தது. சம்பத்ராய்க்கு எப்போதுமே குதிரைகளின்மேல் ஆசை. அந்தக் குதிரையைப் பார்த்ததுமே அவர் மோகித்துப் போனார். அது மிகவும் அழகிய ஈராக் ஜாதிக் குதிரை. அதன் ஒவ்வோர் அங்கமும் அச்சில் வார்த்ததுபோல இருந்தது: சிங்கத்தைப் போன்ற மார்பு; சிறுத்தையைப் போன்ற இடை.

அதனுடைய அந்த அன்பையும், எஜமான விசுவாசத்தையும் கண்டு ஜனங்களுக்கு அத்தியாச்சரியம் உண்டாயிற்று. "ஜாக்கிரதை! அன்புள்ள இந்தப் பிராணிமீது யாரும் ஆயுதத்தைச் செலுத்தாதீர்கள். இதை உயிரோடு பிடியுங்கள். இது என் குதிரை லாயத்தின் அழகை மிகுதிப்படுத்தும். இதை என்னிடம் கொண்டு வருபவன்மீது நான் பணத்தைச் சொரிவேன்!" என்று அரசர் உத்தரவிட்டார்.

சைனிகர்கள் நாலுபுறத்திலிருந்தும் பாய்ந்தார்கள்; ஆனல் எவனுக்கும் அதனருகில் செல்லத் தைரியம் உண்டாகவில்லே. ஒருவன் அதை 'த்ஸூ! த்ஸூ!' என்று கூப்பிட்டுக்கொண்டிருந்தான்; மற்றொருவன் அதை வலேயில் சிக்கவைக்க யோசனே செய்துகொண்டிருந்தான். ஆனல் எந்த உபாயமும் வெற்றிகரமாவதாயில்லே. அங்கே வீரர்கள் ஒரே கூட்டமாகக் கூடியிருந்தனர்.

அப்போது ஸாரந்தா தன் கூடாரத்திலிருந்து வெளியே வந்து, சிறிதும் அச்சமின்றிக் குதிரையினிடம் சென்ருள். அவள் கண்களில் புரட்டின் ஒளி இல்லே; அன்பின் ஒளி இருந்தது. குதிரை தலேயைத் தாழ்த்தியது. ராணி அதன் கழுத்தின்மீது கையை வைத்து, அதன் முதுகைத் தடவிக்கொடுத்தாள். குதிரை அவள் முன்ருனேயில் முகத்தை மறைத்துக்கொண்டது. அவள் அதன் கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டு தன் கூடாரத்தை நோக்கிச் சென்ருள். எப்போதிலிருந்துமே அவளுக்கு அடிமையாயிருந்ததோ என்று தோற்றும் படியாகக் குதிரையும் பேசாமல் அவள் பின்னே சென்றது.

ஆனால், அந்தக் குதிரை ஸாரந்தாவினிடமும் கடுமையாக நடந்துகொண்டிருந்தால், வெகு நன்றா யிருந்திருக்கும்! அதே அழகிய குதிரை, சில காலத்துக்கு அப்புறம், 'அந்த ராஜ பரிவாரத்துக்கென்றே ரத்தின அணிகள் பூண்ட மாய மானாக வந்து சேர்ந்ததோ!' என்று தோன்றும்படி ஆயிற்று.

5

உலகம் ஒரு போர்க்களம். இந்தக் களத்தில் சந்தர்ப்பத்துக்கேற்றபடி நடக்கும் சேனாபதிக்குத்தான் வெற்றி கிடைக்கும். அந்தச் சேனாபதி சந்தர்ப்பத்தைப் பார்த்ததும் எவ்வளவு உற்சாகத்தோடு முன்னேறு கிறானோ, அவ்வளவு உற்சாகத்தோடு ஆபத்தான சமயத்தில் பின்னடைகிறான். அந்த வீர புருஷன் ஒரு ராஷ்டிரத்தை நிர்மித்தவனாகிறான்; சரித்திரம் அவன் பெயரின்மீது புகழ் மலர்களை வர்ஷிக்கிறது.

ஆனால், இந்தக் களத்தில் சில சமயங்களில் வேறொரு விதமான வீரர்களும் வருகிறார்கள். அவர் களுக்கு, சந்தர்ப்பம் நேரும்போது, மேலே அடிமேல் அடி எடுத்து வைத்துக்கொண்டே போகத்தான் தெரியுமேயொழிய, ஆபத்தில் பின்வாங்கத் தெரி யாது. இப்படிப்பட்ட ரணதீரனான புருஷன் வெற்றியை நீதிக்குச் சமர்ப்பித்துவிடுகிறான். அவன் தன் சேனையின் பெயரையே அழித்துவிட்டாலும் விடுவான்; ஆனால் தான் ஒரு முறை போய்ச் சேர்ந்து விட்ட இடத்திலிருந்து ஓர் அடியும் பின் வைக்க மாட்டான். அவர்களில் எவனாவது ஒருவன்தான் மிகவும் அரிதாக உலக அரங்கத்தில் வெற்றி பெறு

கிறன்; ஆனல் பெரும்பாலும் அவனுடைய தோல்வி, வெற்றியைக் காட்டிலும் பெரிய கௌரவமாக மதிக்கப்படுகிறது. அந்த அநுபவசாலியான சேனபதி ராஷ்டிரங்களுக்கு அஸ்திவாரம் ஊன்றுகிறன் என்றல், மானத்துக்காக உயிரைக் கொடுப்பவனும், புறங்காட்டாதவனுமான இந்த வீரன் ராஷ்டிரத்தின் உணர்ச்சிகளை உயர் நிலைக்குக் கொண்டுவருகிறன். இந்தக் காரியத்தில் இவனுக்கு வெற்றியே கிடைக்காவிட்டாலுங்கூட, ஒரு வாக்கியத்திலோ அல்லது ஒரு சபையிலோ இவன் பெயர் நாவில் வரும்போது, அதைக் கேட்பவர்கள் யாவரும் ஒரே குரலில் இவனுடைய கீர்த்தியின் பெருமையை எதிரொலிக்கச் செய்துவிடுகிறர்கள். ஸாரந்தாவும் இப்படி 'மானத்துக்காக உயிரைக் கொடுப்பவர்களி'லே ஒருத்தி.

இளவரசன் முஹிஉத்தீன் சம்பல் நதிக்கரையிலிருந்து ஆக்ராவை நோக்கிச் சென்றபோது, பாக்கியதேவி அவனுக்கு மயில்சாமரம் வீசிக்கொண்டிருந்தாள். அவன் ஆக்ரா போய்ச் சேர்ந்ததும், விஜயலக்ஷ்மி அவனுக்காகச் சிம்மாசனத்தை அலங்கரித்து வைத்திருந்தாள்.

ஔரங்கஜேப் குணங்கள் அறிந்தவன். அவன், பாதுஷாவின் ஸர்தார்களின் குற்றங்களை மன்னித்து, அவரவர்களுடைய ராஜ்யங்களைத் திருப்பித் தந்தான். ராஜா சம்பத்ராய்க்கு அவருடைய விலையிலா உதவியைக் கருதி, 'பாரஹ் ஹஜாரீ மன்ஸப்' என்ற பதவியை அளித்தான். ஓர்ச்சாவிலிருந்து காசிவரையிலும், காசியிலிருந்து யமுனைவரையிலும் அவருடைய ஜாகீரென்று தீர்மானிக்கப்பட்டது. புந்தேலிய அரசன்

மீண்டும் மொகல் சாம்ராஜ்யத்துக்கு அடிமையானுன்; மீண்டும் சுகபோகங்களில் ஆழ்ந்தான். ராணி ஸாரந்தா மீண்டும் பராதீனத் துன்பத்திஞல் கரையலாஞள்.

வலீ-பகாதுர்கான் பேச்சிலே வல்லவன். தன் இனிமையான பேச்சினுல் அவன் விரைவிலேயே பாதுஷா ஆலம்கிரின் நம்பிக்கைக்குப் பாத்திரனுனுன். ராஜ சபையில் அவனுக்கு எல்லோரும் மரியாதை செய்யயலானுர்கள்.

தன் குதிரை கையை விட்டுப் போன துன்பம் கானின் மனத்தைப் பெரிதும் வருத்தியது. ஒரு நாள் இளங்குமரன் சத்திரஸால் அந்தக் குதிரையின்மீதேறி உலாவச் சென்ருன். அவன் கானின் அரண்மனேப் பக்கமாகப் போனுன். வலீ இப்படிப்பட்ட சந்தர்ப் பத்தைத்தான் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண் டிருந்தான். உடனே அவன் தன் வேலேயாட்களுக்குச் சமிக்ஞை செய்தான். அவ்வளவுதான்! உடனே கிங்கரர்கள் அரசகுமாரனே அசுவத்திலிருந்து பலாத் காரமாக உருட்டித் தள்ளிக் குதிரையை ஸ்வீகரித்துச் சென்றனர். பாவம்! ராஜகுமாரன் தானெருவனுகவே என்ன செய்ய முடியும்? கால்நடையாக வீட்டுக்கு வந்து, நிகழ்ந்த தனேத்தையும் ஸாரந்தாவிடம் சொன்னுன்.

ராணியின் முகம் சினத்தால் சிவந்தது. "குதிரை போனதுபற்றி எனக்கு வருத்தமில்லே; நீ அதை இழந்து ஏன் உயிரோடு திரும்பிவந்தாய் என்பதுதான் எனக்கு வருத்தமாயிருக்கிறது. உன் உடலில் புந்தேலி யர்களின் ரத்தம் ஓடவில்லேயா? குதிரை கிடைக்கா

விட்டால் போகிறது ; ஒரு புந்தேலியப் பையனிட மிருந்து அவன் குதிரையைப் பிடுங்கிக்கொள்ளுவது விளையாட்டன்று என்பதை மட்டுமாவது நீ அவர்களுக்குக் காட்டியிருக்க வேண்டாமா?"' என்று கூறி, அவள் தன் இருபத்தைந்து வீரர்களைத் தயாராகும்படி கட்டளையிட்டாள். தானும் ஆயுதங்களணிந்து, போர் வீரர்களோடு வலீயின் மாளிகைக்குப் போய்ச் சேர்ந்தாள். வலீ அதே குதிரைமீது ஏறி ராஜதர்பாருக்குப் போயிருந்தான். ஸாரந்தாவும் ஒரு க்ஷணத்தில், வேகமுள்ள நதிபோல், பாதுஷாவின் தர்பாரின் முன்னே போய் நின்றாள். இந்தக் கோலத்தைக் கண்டதும் தர்பாரில் அமளிகுமளிப்பட்டது. அதிகார வர்க்கத்தினர் தத்தம் இடங்களிலிருந்து வந்து ஒன்று கூடினர். ஆலம்கீரும் தர்பாரை விட்டு வெளியே வந்தான். அங்கே கூடியிருந்தவர் உறைகளிலிருந்து கத்திகளை வெளியே எடுத்தார்கள். நாலுபுறமும் ஒரே கூச்சலாயிருந்தது. எத்தனையோ கண்கள் அதே தர்பாரில் அமரசிம்மனின் வாள் மின்னியதைக் கண்டிருந்தன. அதே சம்பவம் அவர்களுக்கு மீண்டும் ஞாபகத்திற்கு வந்தது.

ஸாரந்தா கணீரென்ற குரலில், "கான்சாகப், சம்பல் நதிக்கரையில் காட்ட வேண்டியிருந்த உங்கள் வீரத்தை, இன்று நீங்கள் ஒரு பேதைப் பாலகனுக்கு முன்பு காட்டியது மிகவும் வெட்கப்படத்தக்கதாயிருக்கிறது. நீங்கள் அவனிடமிருந்து குதிரையைப் பிடுங்கிக் கொண்டது சரியா?" என்றாள்.

வலீயின் கண்கள் அக்கினி ஜ்வாலையைக் கக்கின. அவன் கடுமையான குரலில், "என் பொருளைத் தன்

உபயோகத்துக்குக் கொண்டுவர வேருெருவனுக்கு என்ன அதிகாரம் உண்டு ?" என்று கேட்டான்.

"அது உங்கள் பொருளன்று ; என் பொருள். நான் அதைப் போர்க்களத்தில் பெற்றேன் ; அதன்மீது எனக்கு அதிகாரம் உண்டு. போர்நீதியைப்பற்றிய இவ்வளவு சாதாரணமான விஷயங்கூடவா உங்களுக்குத் தெரியாது ?"

"அந்தக் குதிரையை நான் கொடுக்க முடியாது. அதற்குப் பதிலாக வேண்டுமானுல் என் லாயம் முழுவதையும் தங்களுக்குக் காணிக்கையாகக் கொடுக்கிறேன்."

"நான் என் குதிரையைத்தான் வாங்கிக்கொள்வேன்."

"நான் அதே விலேமதிப்புள்ள ரத்தினங்களேக் கொடுக்கமுடியும் ; ஆனுல் குதிரையைத் தரமுடியாது."

"அப்படியானுல் கத்திகளால் இது தீர்மானிக்கப்படும் !"

புந்தேலிய வீரர்கள் இதைக் கேட்டு வாள்களே இழுத்தார்கள். ஒரு கணத்தில் தர்பார் நிலம் ரத்தத்தில் தோய்ந்துவிடும்போல் தோற்றியது. பாதுஷா ஆலம்கீர் நடுவே வந்து, "ராணி சாகிபா, தாங்கள் சிப்பாய்களே நிறுத்துங்கள். குதிரை தங்களுக்கே கிடைக்கும் ; ஆனுல் அதற்கு விலே நிரம்பக் கொடுக்க வேண்டியிருக்கும்" என்ருன்.

"நான் அதற்காக என் ஸர்வத்தையும் தியாகம் செய்யத் தயாராயிருக்கிறேன்."

"ஜாகீரையும் மன்ஸப்பையுங்கூடவா ?"

"ஜாகீரும் மன்ஸப்பும் ஒரு பொருட்டில்லே."

" தங்கள் ராஜ்யத்தைக்கூடவா ?"

" ஆமாம், ராஜ்யத்தைக்கூட."

" ஒரு குதிரைக்காகவா ?"

" இல்லை ; உலகத்தில் எல்லாவற்றைக் காட்டிலும் மிகுந்த விலைமதிப்புள்ள அந்தப் பொருளுக்காக."

" அது என்ன பொருள் ?"

" மனிதனுடைய மானம்."

இவ்விதமாக ராணி ஸாரந்தா ஒரு குதிரைக்காக, பெரும் பரப்புள்ள ஜாகீரையும், உயர்ந்த ராஜ பதவியையும், ராஜசம்மானத்தையும் எல்லாவற்றையும் கைவிட்டாள் ; அது மாத்திரம் அன்று ; எதிர்காலத்துக்கும் முட்களை விதைத்தாள். அந்த நிமிஷத்திலிருந்து அந்திய காலம் வரையில் சம்பத்ராய்க்கு அமைதி கிடைக்கவே இல்லை.

6

ராஜா சம்பத்ராய் மீண்டும் ஓர்ச்சாவின் கோட்டையில் அடியெடுத்து வைத்தார். மன்ஸப்பும் ஜாகீரும் போய்விட்டது அவருக்கு மிகவும் வருத்தமாகத்தான் இருந்தது ; ஆனால் அவர் தம் வாயினால் ஒரு சொல்லும் குற்றமாகச் சொல்லவில்லை. ஸாரந்தாவின் சுபாவத்தை அவர் நன்கு அறிந்திருந்தார். அப்போது அவர் ஏதாவது குற்றமாகச் சொன்னால், அது அவளுடைய ஆத்ம கௌரவத்தின்மீது சம்மட்டிகொண்டு அடிப்பதுபோல் இருக்கும். சில நாட்கள் அங்கே அமைதியாகக் கழிந்தன. ஆனால், பாதுஷா மாத்திரம் ஸாரந்தாவின் கடுமையான பேச்சுக்களை மறக்கவே இல்லை. 'மன்னிப்பு என்றால் என்ன ?' என்பதையே அவன் அறியான்.

அவன் தன் சகோதரர்களின் தொல்லைகளிலிருந்து விடுபட்டு, ஒருவாறு அந்தக் கவலை தீர்ந்தவுடனே, சம்பத்ராயின் கர்வத்தைப் பொடிசூர்ணமாக்கும் நிமித்தம் ஒரு பெருஞ் சேனையை அனுப்பினான். அவன் இந்த வேலைக்காக இருபத்திரண்டு அநுபவசாலிகளான ஸர்தார்களை நியமித்தான். சுபகரணன் என்ற புந்தேலியன் ஒருவன் பாதுஷாவின் சுபேதாராய் இருந்தான். அவன் சம்பத்ராய்க்குக் குழந்தைப் பருவத்திலிருந்தே நண்பன்; அவர் கூடவே படித்தவன். அவன் சம்பத்ராயைத் தோற்கடிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டான். இன்னும் பல புந்தேலிய ஸர்தார்களும் அரசரைப் புறக்கணித்துவிட்டு, பாதுஷாவின் சுபேதாரோடு கலந்துகொண்டார்கள்.

கடும்போர் மூண்டது. சகோதரர்களின் வாள்கள் ரத்தத்தில் தோய்ந்து சிவந்தன. அந்தச் சமயத்தில் ராஜா சம்பத்ராய்க்கு வெற்றி கிடைத்தது; ஆனால் அவருடைய சக்தி எப்போதைக்குமாக க்ஷீணித்துப் போயிற்று. அவருக்கு வலக்கரமாக இருந்த புந்தேலிய அரசர்கள் பாதுஷாவின் தயவைக் கோரி நின்றனர். அவர் கூட்டாளிகளில் பலர் போரில் மடிந்தனர்; சிலர் துரோகம் செய்தனர். சொந்த உறவினர்கள்கூட அவரைப் பார்த்தும் பாராததுபோல் சென்றார்கள். ஆனால் இவ்வளவு கஷ்டங்களிலும் அவர் தைரியத்தை இழக்கவில்லை; சாகசத்தை விடவில்லை. அவர் ஓர்ச்சாவை விட்டு, மூன்று வருஷங்கள் வரையில் புந்தேல்கண்டின் மரங்களடர்ந்த மலைப் பிராந்தியங்களில் ஒளிந்து திரிந்தார். பாதுஷாவின் படை வீரர்கள், வேட்டை மிருகங்களைப்போல், நாடெங்கும் அவரைத் தேடி வட்டமிட்டார்கள். ஒவ்

வொரு நாளும், காட்டில் எவனுவது ஒரு வீரனை அரசர் எதிர்க்க நேரும். ஸாரந்தா எப்போதும் அவரோடு கூடவே இருந்து, அவர் தைரியத்தை வளர்த்தாள். தைரியத்தை முற்றும் இழந்து, கொஞ்ச நஞ்சம் இருந்த நம்பிக்கையும் போய்விடக்கூடிய பேராபத்துக்களிலுங் கூட அவளுடைய தற்காப்புத் தர்மம் அவளைக் காத்து வந்தது. கடைசியில் மூன்று வருஷங்களுக்கப்புறம், பாதுஷாவின் சுபேதார்கள், "இந்தச் சிங்க வேட்டை தங்களால் தவிர வேறு யாராலும் ஆகாது" என்று ஆலம்கீருக்குத் தெரிவித்தார்கள். "சேனைகளைத் திருப்பி அனுப்புங்கள்; முற்றுகையை நீக்கி விடுங்கள்" என்று பதில் வந்தது. தொல்லை ஒழிந்ததென்று ராஜா நினைத்தார்; ஆனுல் சீக்கிரமே அவர் நினைத்தது பிரமை என்று தெரிந்தது.

7

மூன்று வாரங்களாக, பாதுஷாவின் சைனியம் ஓர்ச்சாவைச் சூழ்ந்துகொண்டிருக்கிறது. கடுமையான வார்த்தைகள் உள்ளத்தை அரிப்பதுபோல, துப்பாக்கிக் குண்டுகள் கோட்டைச் சுவர்களைப் பல இடங்களில் சேதப்படுத்தியுள்ளன. கோட்டைக்குள் இருப்பவர்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் பெண்கள்; குழந்தைகள் அவர்களைவிடச் சற்றுக் குறைவு. ஆண்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் குறைந்துகொண்டே வருகிறது. போக்கு வரவுக்கான பாதைகள் நாலுபுறமும் மூடப்பட்டுள்ளன. காற்றும் உள்ளே புகமுடியாது. உணவுப் பொருள்களோ மிகவும் குறைந்திருக்கின்றன. பெண்கள், ஆண்களும் குழந்தைகளும்

உயிரோடு இருக்கவேண்டுமென்று தாம் பட்டினியாய் இருக்கிறார்கள். ஜனங்கள் நம்பிக்கையை அடியோடு இழந்திருக்கிறார்கள். ஸ்திரீகள் கதிரவனை நோக்கிக் கைதூக்கி எதிரிகளைச் சபிக்கிறார்கள். பாலகர்கள் கோபத்தோடு சுவரின் மறைவிலிருந்து அவர்கள்மீது கல்லெறிகிறார்கள்; அந்தக் கற்கள் சுவரைத் தாண்டிச் சென்று அவர்கள்மீது விழுந்தால்தானே? இந்த லக்ஷணத்தில், ராஜா சம்பத்ராய் ஜ்வரத்தால் பீடிக்கப் பட்டவராய்க் கட்டிலை விட்டுப் பல நாட்களாக எழுந் திருக்கவே இல்லை. அவர் புஜபலத்தில் ஜனங்கள் சற்றுத் தைரியமாக இருந்தார்கள்; ஆனால் அவருடைய நோயினால் கோட்டை முழுவதிலும் நிராசையே பரவி யிருக்கிறது.

அரசர் ஸாரந்தாவிடம், "இன்று எதிரிகள் கட் டாயமாகக் கோட்டைக்குள் நுழைந்துவிடுவார்கள்" என்றார்.

"இந்தக் கண்களால் நாம் அந்த நாளைப் பார்க்கும் படி நேரிடாமலிருக்கவேண்டும். ஆண்டவன் அவ்வளவு கிருபை செய்தால் போதும்!" என்றாள் ஸாரந்தா.

"இந்த அநாதை ஸ்திரீகளும் பாலகர்களும் வருந்து கிறார்களே என்பதுதான் எனக்குப் பெருங் கவலை. நம் மோடு சேர்ந்து அவர்களும் கஷ்டப்படுகிறார்களே?"

"நாம் இங்கிருந்து வெளியே போய்விட்டால் எப்படி?"

"இந்த அநாதைகளை விட்டுவிட்டா?"

"இப்போது நாம் இவர்களை விட்டுப் போவது தான் நன்மை. நாம் இங்கே இல்லாமலிருந்தால், எதிரி

கள் கட்டாயமாக இவர்களிடம் கொஞ்சமாவது இரக்கப்படுவார்கள்."

"அது தவறு. இவர்களை என்னால் விடமுடியாது. நம் தொண்டுக்காகத் தம் உயிர்களை அர்ப்பணம் செய்த வீரபுருஷர்களின் பெண்டு பிள்ளைகளை நான் ஒரு போதும் தனியே விடமாட்டேன்.'

"ஆனால் நாம் இங்கே இருந்து இவர்களுக்கு எந்த உதவியும் செய்ய முடியாதே ?"

"இவர்களோடு நாமும் உயிரைக் கொடுக்கலாம் அல்லவா? நான் இவர்களைக் காக்க என் உயிரைப் பணயமாக வைப்பேன். இவர்களுக்காக பாதுஷாவின் சேனைத்தலைவர்களிடம் போய்க் கெஞ்சி, அவர்களை முகஸ்துதி செய்வேன். நான் சிறைக் கஷ்டங்களை அநுபவிக்க நேர்ந்தாலும் சரி ; இந்தச் சங்கடத்தில் மட்டும் இவர்களை விட்டுப் போகமாட்டேன்."

ஸாரந்தா வெட்கமுற்றுத் தலை கவிழ்த்தாள் ; 'நம் அன்பான கூட்டாளிகளை எரியும் நெருப்புக்கு நடுவிலே விட்டுவிட்டு நம் உயிரைக் காப்பாற்றுவது படு நீசத்தனம் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. நான் ஏன் தன்னலத்தில் இத்தனை குருடியானேன் ?' என்று யோசித்தாள். ஆனால் திடீரென்று அவளுக்கு ஓர் எண்ணம் உதித்தது. "இவர்களிடத்தில் எந்த எதிரியும் எந்த அநியாயமும் செய்யமாட்டான் என்று உங்களுக்கு நம்பிக்கை உண்டாகும் பட்சத்தில், நீங்கள் இங்கிருந்து செல்வதற்குத் தடையொன்றும் இராதே ?" என்று கேட்டாள்.

அரசர் சிறிது நேரம் சிந்தித்து, "அப்படிப்பட்ட நம்பிக்கையை யார் கொடுப்பார்கள்?" என்று வினவினர்.

"பாதுஷாவின் சேனைத்தலைவனின் பிரதிக்கினைக் கடிதம் கொடுக்கும்."

"சரி; அப்படியிருந்தால் நான் ஆனந்தத்தோடு புறப்படுவேன்."

ஸாரந்தா சிந்தனைக் கடலில் மூழ்கினள். 'பாதுஷாவின் சேனைபதியினிடமிருந்து இந்தப் பிரதிக்கினைக் கடிதத்தை வாங்குவது எப்படி? இந்தச் செய்தியை எடுத்துக்கொண்டு அங்கே யார் போவார்கள்? போனாலும் அந்த இரக்கமற்றவர்கள் இவ்விதப் பிரதிக்கினையை எதற்காகச் செய்துகொடுப்பார்கள்? தமக்குப் பூரண வெற்றி கிடைக்கவேண்டும் என்பதுதானே அவர்களுடைய ஆவல்? இந்த அரும் பெருங் காரியத்தைச் சாதித்துக்கொண்டு வரக்கூடிய அவ்வளவு நீதிகள் அறிந்தவனும், பேச்சில் வல்லவனும், சாதுரியமுள்ளவனுமான வீரன் என்னிடம் எவன் இருக்கிறன்? சத்திரஸால் வேண்டுமானல் இந்த வேலையைச் செய்யமுடியும். அவனிடத்தில் எல்லாக் குணங்களும் பொருந்தியிருக்கின்றன' என்று தன் மனத்தில் தீர்மானித்துக்கொண்டு, அவள் சத்திரஸாலைக் கூப்பிட்டாள். அவன் அவளுடைய பிள்ளைகள் நால்வரில் அதிகப் புத்திசாலி, சாகசம் உள்ளவன். அவளும் எல்லாரைக் காட்டிலும் அதிகமாக அவனிடம் அன்பு செலுத்தி வந்தாள். சத்திரஸால் வந்து அவளை வணங்கி நின்ற போது, அவள் தாமரைக் கண்களில் நீர் தேங்கியது; உள்ளத்திலிருந்து நீண்ட பெருமூச்சு வெளியே வந்தது.

"அம்மா, எனக்கு என்ன உத்தரவு?" என்று சத்திரஸால் கேட்டான்.

"இன்று சண்டையின் போக்கு எப்படி இருக்கிறது?"

"இதுவரையில் நம்முடைய ஐம்பது வீரர்கள் மடிந்தார்கள்."

"புந்தேலியர்களின் மானம் இனி ஆண்டவன் கையில்தான் இருக்கிறது."

"இன்றிரவு நாங்கள் எதிரிகளைக் கடுமையாகத் தாக்கப்போகிறோம்."

ராணி தன் செய்தியைச் சுருக்கமாக அவனிடம் கூறி, "இந்த வேலையை யாரிடம் ஒப்பிக்கலாம்?" என்று கேட்டாள்.

"என்னிடம்" என்றான் அவன்,

"நீ அதை நிறைவேற்றிக் காட்டுவாயா?"

"ஓ! எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு."

"சரி, புறப்படு; கடவுள் உன் மனோரதத்தை நிறைவேற்றி வைப்பார்."

சத்திரஸால் புறப்பட்டபோது, ராணி அவனை மார்போடு அணைத்துக்கொண்டு, பின்பு ஆகாயத்தை நோக்கி இரு கைகளையும் கூப்பி, "கருணைக்கடலே, இன்று நான் இளைஞனும் முன்னுக்கு வரக்கூடியவனுமான என் புத்திரனை புந்தேலியர்களின் மானத்தின் முன்பு அர்ப்பித்திருக்கிறேன். இனி இந்த மானத்தைக் காப்பது உன் வேலை. நான் மிகவும் விலைமதிப்புள்ள பொருளைச் சமர்ப்பித்திருக்கிறேன். இவனை ஏற்றுக் கொள்" என்றாள்.

மறுநாள் காலையில் ஸாரந்தா ஸ்நானம் செய்த பின், தட்டில் பூஜைக்குரிய பொருள்களை எடுத்துக் கொண்டு கோயிலுக்குச் சென்றாள். அவள் முகம் வெளுத்திருந்தது ; கண்கள் இருண்டு வந்தன. அவள் கோயிலின் வாசலில் போய்ச் சேர்ந்தாளோ இல்லையோ, அவள் தட்டில் வெளியிலிருந்து ஓர் அம்பு வந்து விழுந்தது. அம்பின் நுனியில் ஒரு கடிதத்துண்டு சுருட்டி வைத்திருந்தது. கையில் இருந்த தட்டைக் கோயிலின் திண்ணைமேல் வைத்துவிட்டு, அவள் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தாள். ஆனந்தத்தால் அவள் முகம் மலர்ந்தது ; ஆனால் அந்த ஆனந்தம் க்ஷண நேரத்துக்குத்தான் விருந்தாளியாயிருந்தது. அந்தோ ! அந்தக் கடிதத் துண்டுக்காக அவள் தன் அன்பான மகனைப் பறிகொடுத்துவிட்டாள். கடிதத் துணுக்கை இவ்வளவு அருமையான விலை கொடுத்து யாராயினும் வாங்கியது உண்டா !

ஸாரந்தா கோயிலிலிருந்து திரும்பி ராஜா சம்பத் ராயிடம் வந்து, "பிராணநாதா, தாங்கள் கொடுத்த வாக்கை நிறைவேற்றுங்கள்" என்றாள். அரசர் திடுக்கிட்டு, "நீ உன் பேச்சைப் பூர்த்தி செய்தாயிற்றா ?" என்று கேட்டார். அவள் அந்தப் பிரதிக்கினைக் கடிதத்தை அவரிடம் தந்தாள்.

சம்பத்ராய் அவளைப் பெருமிதத்தோடு பார்த்து, "இனி நான் புறப்படுவேன். இறைவனின் சங்கற்பம் இருந்தால், மீண்டும் ஒருமுறை எதிரிகளைத் திணற அடிப்பேன். ஆனால், ஸாரந்தா, உண்மையைச் சொல் ;

இந்தக் கடிதத்துக்காக என்ன கொடுக்க நேர்ந்தது?" என்று கேட்டார்.

ராணி நெஞ்சடைக்கும் குரலில், "எவ்வளவோ!" என்றாள்.

"நானுந்தான் கேட்கிறேனே?"

"ஓர் இளம்பிள்ளை."

அரசருக்கு இவ்வார்த்தை அம்பு தைத்ததுபோல இருந்தது. "யார்? அங்கதராயனா?" என்று கேட்டார்.

"இல்லை."

"ரதன்ஸாஹு?"

"இல்லை."

"சத்திரஸால்?"

"ஆமாம்."

குண்டுபட்ட பறவை சிறகுகளைப் படபடவென்று அடித்துக்கொண்ட பின்பு உணர்வற்றுத் தரையில விழுவதுபோல, சம்பத்ராய் கட்டிலிலிருந்து எழும்பிப் பின்பு பிரக்ஞையற்றுச் சாய்ந்தார். சத்திரஸால் அவருக்குப் பரமப்பிரியனான புத்திரன். அவருடைய எதிர்கால விருப்பங்கள் யாவும் அவனையே பொறுத்திருந்தன. உணர்வு வந்ததும் அவர், "ஸாரந்தா, நீ செய்தது பெருந்தவறு. சத்திரஸால் கொல்லப்பட்டானால், அவனோடு புந்தேலிய வம்சமே அழிந்து போகும்" என்றார்.

இருள் சூழ்ந்த கங்குல். ராணி ஸாரந்தா குதிரை மேலமர்ந்து, அரசர் சம்பத்ராயைப் பல்லக்குக்குள் உட்காரவைத்து, அவருடன் கோட்டையின் ரகசியமான மார்க்கத்தின் வழியே வெளியில் போய்க்கொண்

டிருக்கிறாள். அன்றைக்கு, வெகுகாலத்துக்கு முன்பு ஒரு நாள் இதே மாதிரியான இருள் சூழ்ந்த துன்ப மயமான இரவில், ஸாரந்தா சீதலாவிடம் ஏதோ கடுமையான வார்த்தைகள் சொன்னாள். சீதலா அப் போது சொன்ன எதிர்கால வாக்கு இன்று பூர்த்தி யடைந்தது, ஸாரந்தா அவளுக்குச் சொன்ன பதிலும் பூர்த்தியாகியே தீருமா?

9

நடுப்பகல். சூரியன் தலைக்கு நேரே வந்து அக்கினி மழை பொழிந்துகொண் டிருந்தான். உடலைப் பொசுக் கும் தீவிரமும் வேகமுமுள்ள காற்று காடுகளிலும் மலைகளிலும் நெருப்பாகித் திரிந்தது. அக்கினிதேவ னின் சேனை முழுவதும் கர்ஜித்துக்கொண்டு வருவது போலத் தோற்றியது. ஆகாய மண்டலம் அதே அச்சத்தால் நடுங்கிக்கொண்டிருந்தது. ராணி ஸாரந்தா குதிரைமீது ஏறியவளாய், சம்பத்ராயை அழைத்துக் கொண்டு, மேற்குப் புறமாகப் போய்க்கொண்டிருந் தாள். ஓர்ச்சா இருபது மைல்கள் தூரம் பின்னால் இருந்தது. 'இனிமேல் பயத்துக்குரிய இடத்திலிருந்து வெளியே வந்துவிட்டோம்!' என்ற எண்ணம் ஒவ் வொரு கணமும் வலுத்துக்கொண்டே வந்தது. ராஜா பல்லக்கில் உணர்வின்றி விழுந்துகிடந்தார். போகிகள் வேர்வையில் மூழ்கியிருந்தனர். பல்லக்குக்குப் பின்னால் ஐந்து குதிரை வீரர்கள் போய்க்கொண் டிருந்தார்கள். தாகத்தால் எல்லோருடைய முகங்களும் சுண்டி யிருந்தன. நாக்கள் வறண்டுபோயின. கண்கள் மர நிழலையும் கிணற்றையும் நாலுபுறமும் தேடி அலைந்தன.

திடீரென்று ஸாரந்தா பின்னால் திரும்பிப் பார்த்தாள். குதிரைவீரர்களின் கூட்டமொன்று அந்தப் புறமாக வருவது அவள் கண்களுக்குத் தெரிந்தது. ‘இனி நாம் தப்புவதற்கு வழி இல்லை. இவர்கள் கட்டாயம் நம் எதிரிகளே’ என்ற எண்ணம் அவள் மண்டையில் சுரீலென்று பட்டது. பிறகு, ‘ஒருவேளை என் குமாரர்கள் நம் மனிதர்களோடு என் உதவிக்கு வந்துகொண்டிருக்கலாம்’ என்ற சிந்தனையும் உதித்தது. நிராசையிலும் ஆசை மனிதனை விடுவதில்லை. பல நிமிஷங்கள் வரையில் அவள் அதே ஆசையும் பயமும் கலந்த நிலையில் இருந்தாள். கடைசியில் அந்தக் கூட்டம் அருகில் வந்தது; வீரர்கள் அணிந்திருந்த ஆடைகள் தெளிவாகத் தெரிந்தன. ராணி ஒரு பெருமூச்சு விட்டாள்; அவள் உடல் திருணம்போல நடுங்கியது. வந்தவர்கள் பாதுஷாவின் சைனிகர்கள்!

ஸாரந்தா போகிகளைப் பல்லக்கை நிறுத்தச் சொன்னாள். புந்தேலிய வீரர்களும் கத்திகளை இழுத்தனர். அரசனின் நிலை கவலைக்கிடமானதாக இருந்தது; ஆனால் அமுங்கியிருக்கும் நெருப்பு, காற்றுப் பட்டதும் எரிவதுபோல், ஆபத்து நெருங்கியிருப்பதை அறிந்தவுடனே, அவருடைய உளுத்துப்போன சரீரத்திலும் வீர ஆத்மா சுடரொளி வீசியது. அவர் பல்லக்கின் திரையை விலக்கிவிட்டு வெளியே வந்தார். அம்பையும் வில்லையும் கையில் எடுத்தார்; ஆனால் அவர் கையில் முன்பெல்லாம் இந்திரனின் வஜ்ராயுதம்போல் விளங்கிய அந்த வில் அப்போது கொஞ்சமும் வணங்கவே இல்லை. அவர் தலை சுழன்றது; கால்கள் நடுங்கின. அவர் தரையில் விழுந்தார். வரப்போகும் அசுபச்

செய்தி தெரிந்துவிட்டது. சிறகற்ற பறவை, பாம்பு தன் புறமாக வருவது கண்டு மேலே எழும்பி மீண்டும் விழுவதுபோல, ராஜா சம்பத்ராய் சமாளித்துக் கொண்டு எழுந்தார்; மீண்டும் விழுந்தார். ஸாரந்தா அவரை உட்காரவைத்து, அழுதுகொண்டே அவரோடு பேச முயன்றாள்; ஆனால் அவள் வாயிலிருந்து, "பிராணநாதா!" என்ற ஒரு சொல்தான் வெளிவந்தது. அதற்குமேல் அவளால் பேச முடியவில்லை. மானத் துக்காக உயிரை விடும் ஸாரந்தா அப்போது சாதாரணப் பெண்களைப்போல் சக்தியற்றவளானாள்; ஆயினும் ஓரளவுக்கு இந்தப் பலவீனம் பெண்குலத் துக்கு அழகுதான்.

சம்பத்ராய், "ஸாரந்தா, அதோ பார்; நம்முடைய இன்னுமொரு வீரன் தரையில் சாய்ந்தான். அந்தோ! எந்த ஆபத்துக்கு நான் என் வாழ்நாள் முழுவதும் பயப்பட்டுக்கொண்டிருந்தேனோ, அது இந்த அந்திம காலத்தில் வந்து சூழ்ந்துகொண்டது. என் கண்களின் முன்பு எதிரிகள் உன் கோமளமான தேகத்தைக் கையால் தீண்டுவார்கள்; நான் என் இடத்திலிருந்து அசையக்கூட முடியாது. ஐயோ! சாவே, நீ எப்போது வருவாய்?" என்று கூறிக்கொண்டே, ஏதோ யோசனை யுடன் தன் கத்தியின் பக்கமாகக் கையை நீட்டினார். ஆனால் அவர் உடலில் அதை இழுக்க அவ்வளவு பலம் இல்லை. அப்போது ஸாரந்தாவிடம், "அன்பே, எத்தனையோ தடவைகளில் நீ என் மானத்தைக் காத்திருக்கிறாய்" என்றார்.

இதைக் கேட்டவுடனே ஸாரந்தாவின் வாடிய முகத்தில் செம்மை படர்ந்தோடியது; கண்ணீர்

வற்றியது. தான் இப்போதும் கணவனுக்கு ஏதாவது உதவி செய்யக்கூடும் என்ற நம்பிக்கையினுல் அவள் உள்ளம் வன்மை யடைந்தது. அவள், அவருக்கு நம்பிக்கை உண்டாகும்படியான தோற்றத்தோடு அவரைப் பார்த்து, "ஈசுவர சங்கற்பம் இருந்தால், நான் சாகும்வரையிலும் தங்கள் மானத்தைக் காப்பேன்" என்றுள்.

ராஜா உயிரைக் கொடுக்கும்படி அவளிடம் சங்கேதம் செய்வதாக அவள் கருதினுள்.

"நீ என் பேச்சை எப்போதுமே தட்டியதில்லை" என்றுர் அரசர்.

"சாகும்வரையிலும் தட்டமாட்டேன்."

"இது என் கடைசிக் கோரிக்கை; இதை நீ ஒப்புக்கொள்ளாமலிருக்கக் கூடாது."

ஸாரந்தா வாளை உருவித் தன் மார்பின்மீது வைத்துக்கொண்டு, "இது தங்கள் உத்தரவு மாத்திர மன்று; நான் சாகும்போது இந்தத் தலை தங்கள் திருவடிக் கமலங்களில் இருக்கவேண்டும் என்பதே என் மனப்பூர்வமான அபிலாஷை" என்றுள்.

"நீ என் கருத்தை அறிந்துகொள்ளவில்லை. நீ என்னை எதிரிகளின் கையிலா விட்டுப்போக விரும்பு கிருய்? நான் விலங்குகள் அணிந்து டில்லித் தெருக் களில் பழிக்குப் பாத்திரனுக அலையவேண்டுமென்று உனக்குத் தோன்றுகிறது?"

ராணி ஒன்றும் புரியாதவள்போல் ராஜாவைப் பார்த்தாள். அவர் கூறிய கருத்தை அவள் அறிந்து கொள்ளவில்லை.

" நான் உன்னிடம் ஒரு வரம் கேட்கிறேன் " என்ருர் அரசர்.

" சந்தோஷமாகக் கேளுங்கள். "

" இது என் கடைசி வேண்டுகோள். நான் என்ன சொன்னுலும் செய்வாய் அல்லவா ? "

" என் தலேமீது ஆணேயாகச் செய்வேன். "

" இதோ பார் ; நீ வாக்குக் கொடுத்திருக்கிருய். மறுக்கக்கூடாது. "

" நீங்கள் சொல்வதுதான் தாமதம் " என்ருள் ஸாரந்தா நடுங்கிக்கொண்டே.

" உன் வாளே என் மார்பில் குத்திவிடு. "

அரசியின் இருதயத்தின்மீது இடி விழுந்ததுபோ லிருந்தது. " என் வாழ்க்கைத் தலேவ ! " என்ருள். அதற்குமேல் அவளால் ஒன்றும் சொல்ல முடியவில்லே. அவள் கண்களில் நிராசை படர்ந்தது.

" நான் விலங்குகள் அணிவதற்காக உயிர்வாழ விரும்பவில்லே " என்ருர் அரசர்.

" ஐயோ ! இதை நான் எப்படிச் செய்வேன் ? " என்ருள் ஸாரந்தா.

ஐந்தாம் வீரன் - அவன்தான் கடைசியானவன் - தரையில் சாய்ந்தான். அரசர் எரிச்சலோடு, " இந்தப் பயங்கொள்ளித்தன்மையிலா மானத்தைக் காப்பதாகக் கர்வம் பேசினுய் ? " என்ருர்.

ப்ரதுஷாவின் சைனிகர்கள் அரசரை நோக்கிப் பாய்ந்தனர். அவர் நிராசை நிரம்பிய பார்வையோடு அரசியைப் பார்த்தார். ஸாரந்தா ஒரு கணம் தீர்மான மின்றி நின்ருள். ஆனுல் ஆபத்துக் காலத்தில் மனிதனின் நிச்சய புத்தி பலம் பெற்றுவிடுகிறது.

சைனிகர்கள் அரசரைப் பிடிப்பதற்கு இருந்தார்கள்; அதற்குள் ஸாரந்தா மின்னல்போல் பாய்ந்து தன் வாளே அரசரின் மார்பில் புதைத்துவிட்டாள்.

காதற் படகு கடலில் மூழ்கியது. அரசரின் இருதயத்திலிருந்து ரத்தம் வெள்ளமாகப் பாய்ந்தது; ஆனல் அவர் முகத்தில் அமைதி நிலவியது.

எத்தனை கருணையான காட்சி! கணவனுக்காக உயிரைக் கொடுத்துவந்த மங்கையே இன்று அவன் உயிரை மாய்த்தாள். எந்த இருதயத்தின் ஆலிங்கனத்தைப் பெற்று அவள் தன் இளமையின்பத்தை அநுபவித்தாளோ, எந்த இருதயம் அவளுடைய விருப்பங்களுக்குக் கேந்திரமாக இருந்ததோ, எந்த இருதயம் அவளுடைய பெருமையை வளர்த்துவந்ததோ, அதே இருதயத்தை இன்று ஸாரந்தாவின் வாள் பிளக்கச் செய்தது. வேறு எந்தப் பெண்ணின் வாள் இவ்வித வேலையைச் செய்திருக்கிறது!

ஆஹா! ஆத்மாபிமானத்தின் எவ்வளவு இன்பமயமான முடிவு இது! உதயபூரின் சரித்திரத்திலும் மார்வாடத்தின் சரித்திரத்திலுங்கூட ஆத்ம கௌரவத்தை விளக்கிக் காட்டும் இவ்விதச் சம்பவங்கள் கிடைப்பதில்லை,

பாதுஷாவின் வீரர்கள் ஸாரந்தாவின் அந்தச் சாகசத்தையும் தைரியத்தையும் கண்டு பிரமித்துப் போனர்கள். அவர்களுடைய தலைவன் முன்வந்து, "ராணிசாகபா, அல்லா சாட்சியாக நாங்கள் எல்லாரும் தங்களுக்கு அடிமைகள். தாங்கள் என்ன உத்தரவு இட்டாலும், தலைமேலாணையாகக் கொண்டு செய்து முடிப்போம்" என்றான்.

"எங்கள் பிள்ளைகளில் எவனுவது உயிரோடு இருந்தால், இந்த இரண்டு பிணங்களையும் அவனிடம் ஒப்பித்துவிடுங்கள்" என்று கூறி, ஸாரந்தா அங்கேயே அந்த வாளைத் தன் மார்பில் குத்திக் கொண்டாள்.

அவள் உணர்வற்றுத் தரையில் சாய்ந்தபோது, அவள் தலை ராஜா சம்பத்ராயின் மார்பின்மீது இருந்தது.

தைமூரின் உள்ளம்

1

தமது உக்கிரமான பராக்கிரமத்தினுல் கிறிஸ்துவ உலகை நடுங்கவைத்துக்கொண் டிருந்தார்களே, அந்த வீரத் துருக்கியர்களின் ரத்தம் இன்று குஸ்துந்துனியா வின் தெருக்களில் பாய்ந்தோடுகிறது. நூறு வருஷங் களுக்கு முன்பு துருக்கியர்களின் ஆதிக்கத்தால் மனம் புழுங்கிய அதே குஸ்துந்துனியா, இன்று அவர்களின் சூடான ரத்தத்தைப் பருகி மனத்தைக் குளிர்வித்துக் கொண்டிருக்கிறது. எழுபதினுயிரம் துருக்கிய சேனு வீரர்களின் பிணங்கள் பாஸ்ப(f)ரஸ் நதியின் அலைகளில் மிதக்கின்றன. துருக்கிய சேனுபதி ஒரு லக்ஷம் வீரர் களோடு, தன் விதியின் தீர்ப்பை அறிவதற்காக, தைமூரின் பேரொளியின் முன்பு நின்றுகொண் டிருக்கிருன்.

தைமூர் வெற்றி பொலிந்த கண்களை உயர்த்தி, சேனைத்தலைவன் யஜ்(z)தானியைப் பார்த்து, "என்ன வேண்டும் உனக்கு? வாழ்வா, மரணமா?" என்று சிங்கம்போல் கர்ஜித்தான்.

யஜ்தானி கர்வத்தோடு தலைநிமிர்ந்து, "மானத்தோடு வாழ்வதானால் வாழ்வு வேண்டும்; இல்லாவிட்டால் மரணம்" என்றான்.

தைமூரின் சினம் பொங்கியது. அவன் பெரிய பெரிய மானிகளின் தலைகளைத் தாழ்த்தியவன். இப்படிப் பட்ட சந்தர்ப்பத்தில் இம்மாதிரியான பதிலைக் கேட்டுக் கொள்ளும் பொறுமை அவனிடம் இல்லை. அந்த ஒரு லக்ஷம் மனிதர்களின் உயிர் அவன் கைப்பிடியிலே இருக்கிறது. அவர்களை அவன் ஒரு கணத்தில் நசுக்க முடியும். அப்படி இருந்தும் இவ்வளவு கர்வமா! மானத்தோடு வாழ்வதாம்! இதற்கு என்ன அர்த்தம்? ஏழைகளின் வாழ்க்கையைப் பணக்காரர்களின் போக விலாசங்களுக்காகப் பலியிடுவதென்ன, பழையபடி மதுபானக் கச்சேரிகளைக் கூட்டுவதென்ன, அர்மீனியாவையும் காப்(f) பிரதேசத்தையும் சேர்ந்த அந்தத் தேவமாதர்களொத்த மோகனாங்கிகள் என்ன - இவையெல்லாந்தாமே இதற்கு அர்த்தம்? * * * இல்லை, இல்லை. துருக்கியர்கள் மீண்டும் பழையபடியே மதம் பிடித்துக் கண்தெரியாத சுயாதீனத்தில் இஸ்லாமிய மதத்தின் பேரை அழிக்குமாறு விடுவதற்காகவா, தைமூர், கலீபா பாய்ஜ்(z)தின் திமிரை அடக்கியிருக்கிறான்? அப்படிச் செய்வதாக இருந்தால் அவன் இவ்வளவு ரத்தத்தைப் பெருக்கவேண்டிய அவசியந்தான் என்ன? மனித ரத்தத்தின் பிரவாகம் சங்கீதத்தின் பிரவாகம் அன்று; ரஸப் பிரவாகமும் அன்று. அதைப் பார்த்தவுடனே கண்கள் முகத்தைத் திருப்பிக் கொள்ளும்; இதயம் தலைகுனியும்; அத்தனை பயங்கரமான ஒரு காட்சி அது! அப்படிப்பட்ட காட்சியைக்

காண்பதற்காகத் தன் வாழ்க்கையைப் பணயம் வைக்க தைமூர் அத்தனை குரூரமான மிருகம் அல்ல.

அவன், தன் சொற்களில் இகழ்ச்சி நிரம்ப, "நீ எதை மானத்தோடு வாழ்வது என்கிறாயோ அது பாவ வாழ்க்கை; நரக வாழ்க்கை!" என்றான்.

யஜ்தானி தைமூரினிடமிருந்து இரக்கத்தையோ மன்னிப்பையோ எதிர்பார்க்கவில்லை. அவனுடைய உயிரோ அல்லது அவனுடைய படைவீரர்களின் உயிரோ எவ்விதத்திலும் தப்ப முடியாது. ஆகவே அவன் ஏன் தைமூருக்கு அடங்கவேண்டும்? அவன் தன் உயிரையும் மதியாமல் தைமூரின்மீது தனக்குள்ள வெறுப்பை ஏன் வெளியிடலாகாது? அவன் ஒரு முறை பயந்த கண்களோடு தன் பின்னால் நின்ற ஓர் அழகிய இளைஞனைப் பார்த்தான். அவ்விளைஞன் தன் இளமையின் கடிவாளத்தை இழுத்துக்கொண்டிருப்பவன்போல நின்றிருந்தான். சாணை பிடிக்கப்படும் எஃகுத் தகடுபோல, அவனுடைய ஒவ்வோர் அவயவத்திலிருந்தும் அடங்காக் கோபத்தின் பொறிகள் பறந்தன. யஜ்தானி அவன் உருவத்தைக் கண்டதும் தன் உருவிய வாளை உறையிலிட்டு, அவமானத்தைப் பொறுமையால் வெல்பவன்போல அடக்கமுற்று, "அரசே, இப்போது தாங்கள் வெற்றி யடைந்திருக்கிறீர்கள். ஆனால் தாங்கள் என்னை மன்னிப்பதாயின் ஒரு விஷயம் சொல்லுகிறேன்; துருக்கியர்கள் தமது வாழ்க்கையைப்பற்றித் தாதாரியர்களிடமிருந்து உபதேசம் பெற்றுக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. உலகத்திலிருந்து வேறுபட்டு, தாதார் நாட்டு வறண்ட சமவெளிகளில், தியாகத்தையும் விரதத்தையும்

வழிபாடு செய்துகொண்டு அவர்கள் வாசம் செய்ய முடியும்; அங்கே கிடைக்காத பொருள்களை விலக்கி வாழவும் முடியும். ஆனால் ஆண்டவன் வளங்களைப் பொழிந்துள்ள ஓர் இடத்தில் அந்த வளங்களை அனுபவிக்காமல் வாழ்வது நன்றியற்ற செய்கையாகும். 'வாள் ஒன்றுதான் நாகரிகத்துக்கு நற்சாட்சிப் பத்திரம்' என்று சொல்லும் பக்ஷத்தில், **கால்** ஜாதியினர் ரோமானியர்களைக் காட்டிலும் நாகரிகத்தில் எவ்வளவோ மேம்பட்டவர்கள் என்றே கூறவேண்டும்" என்றான்.

தைமூர் இடியிடியென்று சிரித்தான். அவனுடைய சிப்பாய்கள் உருவிய வாள்களைக் கையில் ஏந்தினார்கள். தைமூரின் இடிநகை, சாவின் அட்டஹாஸம் அல்லது விழப்போகும் பேரிடியின் கடகடச் சத்தம்போல இருந்தது.

"தாதாரியர்கள் மிருகங்களா? ஏன்?" என்றது இடிமுழக்கம்.

"நான் அப்படிச் சொல்லவில்லை."

"அல்லா உன்னைச் சுகபோகத்துக்காகச் சிருஷ்டித்திருக்கிறாரென்று நீ சொல்லுகிறாய். நான், 'இது நாஸ்திகவாதம்' என்கிறேன். அல்லா மனிதனைத் தம்மை வழிபடுவதற்காகப் படைத்திருக்கிறார்; இதற்கு விரோதமாக எவனாயினும் ஏதாவது செய்தால் அவன் காபிர்; நாஸ்திகன்; அவன் நரகத்துக்குப் போவான். ஆண்டவனின் தூதர் - பைகம்பர் - நமது வாழ்க்கையைத் தூய்மைப்படுத்தவும், நம்மை உண்மையான மனிதர்களாக ஆக்கவும் வந்திருந்தாரேயொழிய நமக்குத் தீய நெறியை உபதேசிக்க வரவில்லை. தைமூர் உலகத்தை இந்த நாஸ்திகத்திலிருந்து விடுவித்துத்

தூயதாக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டாயிற்று. அல்லாவின் பவித்திரத் தூதரின் திருவடிகளின் ஆணையாகச் சொல்லுகிறேன் ; நான் இரக்கமற்றவன் அன்று ; குரூரமானவன் அன்று ; ரத்த வெறி கொண்டவனும் அன்று ; ஆனால் நாஸ்திகத் துக்குத் தண்டனை என் மதத்தில் மிருத்தியுவைத் தவிர வேறில்லை.''

இவ்வாறு சொன்னதும் அவன் தாதாரியச் சேனைத் தலைவனைக் கொலையைக் குறிக்கும் கண்களோடு பார்த் தான். அதே க்ஷணத்தில் தேவன்போன்ற ஒருவன் வாளை வீசிக்கொண்டு யஜ்தானியின்மீது பாய்ந்தான். தாதாரியச் சேனையும் வாள்களை உருவிக்கொண்டு துருக்கியச் சேனையைத் தாக்கியது. ஒரு நிமிஷத்தில் எத்தனையோ பிணங்கள் தரையில் சாய்ந்தன.

2

யஜ்தானிக்குப் பின்னால் நின்றிருந்த அவ்வழகிய இளைஞன் முன்வந்து தைமூரின் எதிரே நின்றான். சாவைத் தன் கைப்பிடிகளால் நசுக்குபவன்போல முஷ்டிகளைக் கசக்கிக்கொண்டு, அவன் சொல்லுகிறான்:

" உன்னை முஸல்மான் என்று சொல்லிக்கொள்ளும் அடே பாதுஷா ! நீ சீர்திருத்துவதற்காகக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் இஸ்லாமிய மதம் இதுதானா ? தம் கலீபாவுக்கும் தமது நாட்டுக்கும் தொண்டு செய்ததைத் தவிர வேறு ஒரு குற்றத்தையும் அறியாத இந்த வீராதிவீரர்களை இவ்வளவு இரக்கமின்றிக் குருதி வெள்ளத்தில் மிதக்கவிடவேண்டும் என்றுதான் இஸ்லாம் கற்பிக்கிறதா ?''

நாற்புறமும் நிச்சப்தம் குடிகொண்டது. இன்னும் மீசைகூட முளைக்காத ஓர் இளைஞன் உலகத்தை யெல்லாம் வென்ற தேஜஸ்வியான பாதுஷா தைமூரை இத்தனை வெளிப்படையான சொற்களில் நிந்திக்கிறான்; அப்படி இருந்தும் அவன் நாக்கு அடித்தொண்டையி லிருந்து அறுத்தெறியப்படவில்லை! அடே! எல்லோரும் ஸ்தம்பித்து நிற்கிறார்கள். தைமூர் மயங்கியவனாய் அவ் விளைஞனையே உற்றுப் பார்த்துக்கொண்டிருக்கிறான்.

முகங்களில் குதூகலத்தோடு கூடிய உற்சாகம் ஜ்வலிக்கும் தாதாரியச் சிப்பாய்களை ஒரு முறை பார்த்தபின்பு, இளைஞன் மேலும் சொல்லலானான்; "நீ இந்த முகம்மதியர்களைக் காபிர்கள் என்கிறாய்; இவர்களைக் கொலை செய்து அல்லாவுக்கும் இஸ்லா முக்கும் தொண்டு செய்துவருவதாக நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய். நான் உன்னை ஒரு வார்த்தை கேட்கிறேன்: அல்லாவைத் தவிர வேறு யாருக்கும் தலை குனியாதவர்களும், நபிநாயகத்தையே தம் ஆண்ட வராகக் கருதுபவர்களும் முஸல்மான்கள் இல்லை என்றால், வேறு எவன் முஸல்மான்? நான் சொல்லு கிறேன்: நாங்கள் காபிர்கள் என்றே வைத்துக் கொண்டாலும் உனக்குக் கைதிகள்தாமே? விலங்கினால் கட்டப்பட்ட கைதிகளைக் கொல்ல இஸ்லாம் உத்தரவு கொடுக்கிறதா? ஆண்டவனின் அடியார்களின் ரத்தத் தைப் பெருக்குவதற்காகவா அல்லா உனக்கு வலிவும் அதிகாரமும் கொடுத்திருக்கிறார்? அபராதிகளைக் கொலைசெய்வதால் நீ அவர்களை நேர்வழிக்குக் கொண்டு போக முடியுமா? நீ எவ்வளவு இரக்கமின்றி எழுபதி னாயிரம் வீரத் துருக்கியர்களை ஏமாற்றிச் சுரங்கவழியே

ஓடச் செய்தாய் என்பதும், அவர்களுடைய பேதைக் குழந்தைகளையும் குற்றமற்ற மனைவிகளையும் அநாதைகளாக்கிவிட்டாய் என்பதும் உனக்குக் கொஞ்சமாயினும் தெரியுமா? இந்தச் செயல்களைக் கொண்டா 'நான் முஸல்மான்' என்று நீ கர்வப்படுகிறாய்? இந்தக் கொலையும் ரத்தப்பெருக்கும் குரூரமுமாகிய மையினலா நீ உன் பெயரை உலகில் ஒளிமயமாக்கப் போகிறாய்? நீ துருக்கியர்களின் ரத்தம் பெருகியோடும் நதியில் உன் குதிரைகளின் குளம்புகளை அமிழ்த்திவிட்டதாக எண்ணுதே; அப்படிச் செய்ததால் நீ இஸ்லாமிய மதத்தை வேரோடு பிடுங்கி எறிந்து விட்டிருக்கிறாய். ஐரோப்பா முழுவதிலும் இஸ்லாமின் மகிமையைப் பரப்பியது, இந்த வீரத் துருக்கியர்களின் ஒப்பிலாத ஆத்மத் தியாகந்தான். இன்று ஸோபியாவின் மாதா கோவிலில் 'அல்லாஹ்-அக்பர்' என்ற ஒலி உன் காதில் விழுகிறது; ஐரோப்பா முழுவதும் இஸ்லாமை வரவேற்கத் தயாராக இருக்கிறது. 'இவர்களுக்கு இந்தப் பரிசு தகுந்ததே' என்று சொல்லத்தகுந்தனவாகவே உன் செயல்கள் உள்ளனவா? கொலைத் தொழிலால் இஸ்லாமுக்குத் தொண்டு செய்துவருவதாக நினைக்கும் இந்த எண்ணத்தை உன் மனத்திலிருந்து நீக்கிவிடு. ஒரு நாள் நீயும் ஸர்வதயாபரனின் முன்பு உன் செயல்களுக்கு விடையளிக்க நேரும். அப்போது உன் ஆக்ஷேபங்கள் செவிசாய்க்கப்பட மாட்டா. அதற்குக் காரணத்தை, இப்போதுங்கூட நன்மையையும் தீமையையும் பகுத்தறியும் சக்தி உன்னிடம் மிச்சமிருக்குமாளுல், உன் மனத்தினிடமே கேள்! நீ இந்த

ஜிஹாத் (மதப்போர்) அல்லாவின் நன்னெறிக்காகத் தொடுத்தாயா என்பதை யோசித்துப் பார். உனக்குக் கிடைக்கும் விடை உன் தலையை வெட்கத்தால் குனியச் செய்யும் என்று நான் கருதுகிறேன்."

கலீபா தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டே நின்றான். யஜதானி நடுநடுங்கும் குரலில், "வையத்துக் கெல்லாம் புகல்தரும் பேரரசே, இவன் இந்த அடிமை யின் பிள்ளை. இவன் மூளையில் ஏதோ கோளாறு இருக்கிறது. மகாராஜா அவர்கள் இவனுடைய அதிகப் பிரசங்கித்தனத்தை மன்னித்தருள வேண்டும். நான் அதற்கான தண்டனையை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்" என்று விண்ணப்பம் செய்து கொண்டான்.

தைமூர் அந்த இளைஞனின் முகத்தை ஸ்திரமான பார்வையோடு பார்த்துக்கொண்டிருந்தான். அன்று தான் அவனுக்குத் தன் வாழ்க்கையில் முதல் முறை யாக அவ்வளவு அச்சமற்ற சொற்களைக் கேட்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவன் முன்னால் பெரிய பெரிய சேனாபதிகளும், மந்திரிகளும், பாதுஷாக்களும் வாயைத் திறந்ததில்லை. அவன் எது செய்தாலும் அல்லது எது சொன்னாலும் அதுதான் சட்டம். அதில் 'உம்' என்று குறுக்கிடும் சக்தி யாருக்கும் இல்லை. அவர் களுடைய ஸ்தோத்திரங்கள் அவனுடைய அகங் காரத்தை ஆகாயத்துக்கு ஏற்றிவிட்டன. இஸ்லாமிய மதத்தை விழிப்புறச் செய்து அதைச் சீர்திருத்துவதற் காகத்தான் அல்லா தன்னை மண்ணுலகுக்கு அனுப்பி யிருக்கிறார் என்ற நம்பிக்கை அவனுக்கு உண்டா

யிற்று. தன்னை ஒரு பைகம்பர் என்று அவன் பறை சாற்றவில்லை. ஆனால் அந்த எண்ணம் மட்டும் அவன் மனத்தில் அசையாமல் இடம் பெற்றிருந்தது. ஆகையால் அன்று ஓர் இளைஞன் தன் உயிரின்மீதுள்ள ஆசையைத் துறந்து, அவனுடைய கீர்த்தியின் ரகசியத் திரையை விலக்கியபோது அவன் உணர்வு விழித்தெழுந்தது. அவன் மனத்தில் கோபத்துக்கும் ஹிம்சைக்கும் பதிலாக, சிரத்தை உதயமாயிற்று. அவனுடைய கண்களின் ஒரு சமிக்ஞை அவ்விளைஞனின் வாழ்க்கைவிளக்கை அணைத்திருக்கமுடியும். உலகத்தை வெல்லும் அவன் வல்லமைக்கு முன்பு, பால்முகம் மாறாத அந்தப் பாலகன், தன் சின்னஞ்சிறு கைகளால் மகா சமுத்திரத்தின் பிரவாகத்தைத் தடுப்பவன்போல நின்றான். எவ்வளவு நகைப்புக்கிடமான சாகசம் அது; ஆனால் அதோடுகூடவே எவ்வளவு தன்னம்பிக்கை நிரம்பியது! தைமூர் அந்த நிராயுதபாணியான பாலகன் முன்பு தான் எவ்வளவு பலவீனன் என்பதை உணர்ந்தான். மனிதனிடத்தில் இப்படிப்பட்ட சாகசத்துக்கு ஒரே ஊற்றுதான் இருக்கமுடியும்; அதாவது உண்மையின்மீது அசையாத நம்பிக்கை. அவனுடைய ஆத்மா ஓடிச் சென்று அவ்விளைஞனின் உடைத்தலைப்பில் ஒட்டிக்கொள்ள விரைந்தது. தைமூர் சத்தியத்திலும் சந்தேகங் கொள்ளும் தார்சனிகன் அல்ல; அசத்தியத்தையும் தனது நம்பிக்கையால் சத்தியமாகச் செய்யும் எளிய சைனிகன் அவன்.

யஜ்தானி அதே குரலில், "அரசே, இவனுடைய நாக்குத் துணிச்சலை மனத்தில் எண்ணாமல் மன்னிக்க வேண்டும்......" என்றான்.

தைமூர் உடனே சிம்மாசனத்திலிருந்து எழுந்து வந்து யஜ்தானியைக் கழுத்தோடு அணைத்துக்கொண்டான். "இந்த அதிகப்பிரசங்கித்தனத்தையும் நாக்குத் துணிச்சலையும் முன்னமே கேட்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்திருந்தால் எவ்வளவு நன்ருக இருந்திருக்கும்! எத்தனையோ நிரபராதிகளைக் கொலை செய்த குற்றத்துக்கு இன்று நான் ஆளாகாமல் இருந்திருப்பேன். இந்த இளைஞனிடத்தில் ஒரு தேவதூதனின் ஆத்மா காட்சி தருவதைக் காண்கிறேன். தீய வழியில் செல்லும் என் போன்றவர்களுக்கு உண்மைப் பாதையைக் காட்ட ஈசனுல் அனுப்பப்பட்ட தூதன் இவன். என் நண்ப, இப்படிப்பட்ட தெய்வ குணங்கள் பொருந்திய பிள்ளைக்குத் தகப்பனுன நீ மகா பாக்கிய சாலி. இவன் பெயர் என்ன என்பதை நான் கேட்கலாமா ?" என்ருன்.

யஜ்தானி முதலில் மூர்த்திபூஜகனுக இருந்து, பின்பு முகம்மதியன் ஆனவன். ஆனுலும் இப்போதுங் கூட அவன் மனத்தில், 'நாம் ஏன் இஸ்லாமை ஒப்புக்கொண்டோம் ?' என்ற சந்தேகங்கள் தோன்றிக் கொண்டிருந்தன. தூக்கு மேடைமீது நின்று, 'அடுத்த க்ஷணத்தில் சுருக்குக்கயிறு என் கழுத்தில் மாட்டிக் கொள்ள, நான் தொங்கப் போகிறேன் !' என்ற எண்ணத்தால் மனங்கலங்கி மெலியும் கைதியை ஒரு தேவதூதன் வந்து மடியில் தூக்கிக்கொண்டால் எப்படி இருக்கும் ? அப்படித்தான் இருந்தது அந்தக் காட்சியும். யஜ்தானி நாத் தழுதழுக்க, "அவனை 'ஹபீப்' என்று கூப்பிடுகிறேம்" என்ருன்.

தைமூர் இளைஞனின் அருகில் சென்று அவன் கையைப் பிடித்துக் கண்களில் ஒற்றிக்கொண்டான். "என் வாலிப நண்ப, நீ உண்மையில் அல்லாவின் ஹபீப் (நண்பன்) தான். 'உன் உடல் மாசற்றது' என்று எல்லோரும் சொல்லிக்கொண்டிருந்தமையால், நான் என் அறியாமையில் எப்போதும் என் பாவங்களைப் புண்ணியங்களாக மதித்தேன். இப்போதுதான் நான் குற்றவாளி என்பது தெரிகிறது. என் கைகளால் இஸ்லாமுக்கு எவ்வளவு நஷ்டமுண்டாயிற்று என்பது இன்றுதான் எனக்குத் தெரிந்தது. இன்றையிலிருந்து நான் உன் கைகளையே பிடித்துக்கொள்கிறேன். நீதான் எனக்கு வழிகாட்டி. நீயே என் ரக்ஷகன். உன் துணையினால்தான் நான் அல்லாவின் தர்க்கா (சந்நிதானம்) வரையில் போய்ச் சேரமுடியும் என்று எனக்கு நம்பிக்கை உண்டாய் விட்டது" என்றான்.

இவ்வாறு சொல்லிக்கொண்டே அவன் இளைஞனின் முகத்தின்மீது பார்வையைச் செலுத்தியபோது, அங்கே நாணத்தின் செம்மை படர்ந்திருந்தது. அந்தக் கடுமையின் ஸ்தானத்தில் இனிய கூச்சம் மிளிர்ந்தது.

இளைஞன் தலைகுனிந்தவாறே, "இது மகாராஜா அவர்கள், குணங்களுக்குத் தக்க மரியாதை செய்யும் தன்மையைக் காட்டுகிறது. இல்லாவிட்டால் நான் எந்தக் கணக்கில் சேர்த்தி!" என்றான்.

தைமூர் அவனை இழுத்துவந்து, தன் அருகில் சிம்மாசனத்தில் உட்காரவைத்தான். பிறகு தன் சேனாபதியிடம், "எல்லாத் துருக்கியக் கைதிகளையும்

விடுதலை செய். அவர்களுடைய ஆயுதங்களைத் திருப்பிக் கொடுத்துவிடு. கொள்ளையிட்ட பொருள்களைச் சிப்பாய் களுக்குச் சமமாகப் பங்கிட்டுக் கொடு'' என்று உத்தர விட்டான்.

சேனாபதி அந்தக் கட்டளையை நிறைவேற்றச் சென்றான். தைமூர் ஹபீபின் கையைப் பிடித்துக் கொண்டு தன் கூடாரத்துக்குப் போய், இரு விருந்தினர் களின் விருந்துக்கு ஏற்பாடு செய்யலானான். சாப்பாடு முடிந்ததும் அவன் தன் வாழ்க்கையின் கதைகளை யெல்லாம் அழுதுகொண்டே சொன்னான். அந்தக் கதைகளில் ஆரம்பத்திலிருந்து கடைசி வரையில், கலப் படமில்லாத மிருகத்தன்மையும் காட்டுமிராண்டித் தனமுமுள்ள செயல்கள் நிரம்பியிருந்தன. அவன் அச் செயல்களையெல்லாம், தான் ஆண்டவனின் கட்டளையை நிறைவேற்றுவதாக எண்ணி அந்த மயக்கத்தில் செய் திருந்தான். அவன் அல்லாவுக்கு எப்படி முகத்தைக் காட்டுவான்? அழுது அழுது அவனுக்குத் தொண்டை கம்மியது.

கடைசியில் அவன் ஹபீபிடம், "என் வாலிப நேச, இனி நீதான் என் படகை அக்கரை சேர்ப்பிக்க முடியும். நீ எனக்கு வழிகாட்டிய மாதிரியே, என்னை லக்ஷ்ய ஸ்தானத்துக்கும் கொண்டுபோய்ச் சேர்த்துவிடு. என் சாம்ராஜ்யத்தை இனி உன்னால்தான் பரிபாலிக்க முடியும். நான் அதை நாசவழியில் செலுத்திக்கொண் டிருந்ததை இப்போது அறிந்துகொண்டேன். நீ அதன் மந்திரிப் பதவியை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதே என் பிரார்த்தனை'' என்றான்.

"அரசே, தாங்கள் அவனுடைய திறமைக்கு ஏற்றதைச் சொல்லுகிறீர்கள் ; இது தங்கள் பேரருள். ஆனால் இன்னும் இந்தப் பையனுக்கு ஒன்றும் வயசாக வில்லையே ? மந்திரிப் பதவிக்கு இசைந்த தொண்டுகளை இவன் எப்படிச் செய்து நிறைவேற்றமுடியும்? இன்னும் இவன் படிக்கவேண்டிய நாட்களல்லவா இவை ?" என்று யஜ்தானி விண்ணப்பம் செய்தான்.

ஒருபுறம் மறுப்பும், மறுபுறம் தைமூரின் வற்புறுத்தலுமாக இருந்தன. யஜ்தானி மறுத்தானே தவிர, அவன் மார்பு விம்மிக்கொண்டிருந்தது. மூஸா நெருப்பு எடுத்து வரப்போனார். அவருக்குப் பைகம்பர் பதவி கிடைத்துவிட்டது. அதேபோல் சாவின் வாய்க்குள் புகவேண்டியிருந்த இவனுக்கு மந்திரிப் பட்டம் கிடைத்துவிட்டது. ஆனால், 'இம்மாதிரி ஸ்திரமில்லாத மனமுடைய மனிதனுக்கு என்ன நிலை சொல்லமுடியும் ? இன்று சந்தோஷமாக இருக்கும் போது மந்திரிப் பட்டம் கொடுக்கத் தயாராக இருக்கிறான் ; நாளைக்குக் கோபம் மூண்டால் உயிருக்கே ஆபத்துத்தான் !' என்ற சந்தேகமும் கூடவே இருந்தது. ஹபீபின் திறமையில் அவனுக்கு நம்பிக்கை உண்டு ; ஆயினும், 'அயல்நாட்டில் எந்தச் சமயத்தில் என்ன வருமோ, என்ன நேருமோ ? தர்பாரிகளிடையே எப்போதும் சதியாலோசனைகள் நடந்துகொண்டே இருக்கும். ஹபீப் நேர்மையானவன், அறிவுள்ளவன், சந்தர்ப்பத்தைத் தெரிந்து கொள்பவன் ; ஆனால் வயசினால் மட்டுமே உண்டாகும் அநுபவம் அவனுக்கு எங்கிருந்து வரும் ?' என்று பயந்தான்.

அவன் இந்தப் பிரச்னையைப்பற்றி யோசிப்பதற்காக ஒரு நாள் தவணை வாங்கிக்கொண்டு விடைபெற்றுச் சென்றான்.

3

ஹபீப் யஜ்தானியின் பிள்ளை அன்று; பெண். அவள் பெயர் உம்மதுல் ஹபீப். யஜ்தானியும் அவன் மனைவியும் முகம்மதியர்கள் ஆன சமயத்தில் அவளுக்கு வயசு பன்னிரண்டுதான்; ஆனால் அவள் இயற்கையிலேயே நல்லறிவும் நவநவமான கற்பனைகளும் மட்டுமின்றி, சுதந்தரமான சிந்தனையாற்றலும் பெற்றிருந்தாள். உண்மையையும் பொய்யையும் ஆய்ந்துபார்க்காத வரையில் அவள் எந்த விஷயத்தையும் ஒப்புக்கொள்ள மாட்டாள். தாயும் தகப்பனும் மதம் மாறியதால் அவளுடைய மன அமைதி குலைந்தது; ஆனால் தான் இஸ்லாமிய தர்மநூல்களை நன்றாகப் படித்து ஆராய்ச்சி செய்து ஒரு முடிவுக்கு வராதவரையில், பெற்றோர்களைத் திருப்தி செய்விப்பதற்காக மட்டும் இஸ்லாமின் தீக்ஷையைப் பெற்றுக்கொள்ள அவள் விரும்பவில்லை. அவர்களும் அவளை எவ்விதத்திலும் வற்புறுத்த விரும்பவில்லை. தங்கள் மதத்தை மாற்றிக்கொள்ள அவர்களுக்கு உரிமை இருப்பதுபோலவே, அவளுக்கும் தன் மதத்தில் அசையாமல் நிலைநிற்க உரிமை உண்டல்லவா? பெற்றோர்கள் தன்னிடம் நடந்துகொண்டவிதம் பெண்ணுக்குத் திருப்தியை அளித்தது; ஆனால் அவள் இஸ்லாமிய மதத்தையும் ஜரதக்த மதத்தையும் ஒப்பிட்டுப் பயின்று, இரண்டு வருஷகாலம் ஆராய்ச்சி செய்தாள். முற்றும் பரீக்ஷை செய்தபின்பு அவளும் இஸ்லாமிய

மதத்தில் தீக்ஷை பெற்றாள். அதைக் கண்ட பெற்றோர்களின் ஆனந்தத்தைச் சொல்லிமுடியாது. அவர்கள் பெண் வலுக்கட்டாயத்தினால் முகம்மதிய மதத்தில் சேரவில்லை; தன் இச்சையாலும், தற்பயிற்சியினாலும், நம்பிக்கையினாலுமே முஸல்மான் ஆனாள். இரண்டு வருஷகாலமாக அவர்களைச் சூழ்ந்திருந்த சந்தேகமும் விலகியது.

யஜ்தானிக்குப் பிள்ளை இல்லை. மனிதனின் வாள் வலியே எல்லாவற்றிலும் பெரிய நீதிஸ்தலமாக இருந்த அந்த யுகத்தில், பிள்ளையில்லாதிருத்தல் உலகத்திலேயே மிகப் பெரிய துர்ப்பாக்கியமாக இருந்தது. யஜ்தானி பிள்ளையில்லாக் குறையைப் பெண்ணைக்கொண்டே தீர்த்துக்கொள்ளலானான். பிள்ளைகளைப்போலவே அவளுக்கும் கல்விப்பயிற்சி அளித்தான். அவள் ஆண்களைப் போலவே ஆடைகள் அணிவாள்; குதிரைச் சவாரி செய்வாள்; சஸ்திர வித்தை பயிலுவாள்; தன் தந்தையோடு அடிக்கடி கலீபா பாய்ஜீதின் அரண்மனைக்குப் போவாள்; ராஜகுமாரர்களோடு வேட்டையாடவும் செல்வாள். அதோடுகூடவே அவள் வேதாந்தம், காவியம், விஞ்ஞானம், அத்தியாத்மம் முதலிய விஷயங்களையும் கற்றுக்கொண்டாள். தன் பதினாறுவது வயசிலேயே அவள் ராணுவக் கலாசாலையில் சேர்ந்தாள். இரண்டு வருஷங்களுக்கெல்லாம் மிகவும் உயர்ந்த பரீக்ஷையில் தேறி, சேனையில் உத்தியோகம் வகித்தாள். ஆயுதங்கள் விடுவதிலும் சேனைகளை நடத்தும் கலையிலும் அவளுடைய ஒப்பில்லாத் திறமையைக் கண்டும், அவளுடைய மாசுமறுவற்ற ஒழுக்கத்தினாலும் நடவடிக்கை

யினாலும் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டும், கலீபா பாய்ஜீத் முதல் முதலிலேயே அவளை ஆயிரம் போர் வீரர்கள் கொண்ட ஒரு சிறு படைக்குத் தலைவி யாக்கினான்.

இப்படிப்பட்ட மங்கையை மணக்க விரும்புபவர் களுக்கா குறைவு? அவளோடு கூடவே இருந்துவந்த எத்தனையோ அரசாங்க அதிகாரிகளும், அரச குடும்பத் தைச் சேர்ந்த எத்தனையோ இளைஞர்களும் அவள்மீது உயிரை வைத்தார்கள்; ஆனால் அவள் கண்களுக்கு யாருமே பிடிக்கவில்லை. தினமும் கல்யாணத்தைப் பற்றிய தூதுகள் வந்துகொண்டே இருக்கும்; ஆனால் அவள் எப்போதும் மறுத்துக்கொண்டே இருந்தாள். மணவாழ்க்கை என்ற பேச்சே அவளுக்கு வெறுப்பாக இருந்தது. அவளுடைய சுதந்தரமான சுபாவம் அந்தப் பந்தனத்தில் கட்டுப்பட விரும்பவில்லை. மேலும், இள நங்கைகள் எத்தனையோ ஆசைகளோடு மணம் புரிந்து கொண்டு அழைத்து வரப்படுவதையும், பின்பு எத்த னையோ நிராதரவோடு மாளிகைகளில் அடைக்கப்படு வதையும் அவள் சதாசர்வகாலமும் பார்த்துக்கொண்டே இருந்தாள். அந்தப் பெண்களின் தலைவிதி புருஷர்களின் தயவைப் பொறுத்திருந்தது. அடிக்கடி உயர்குலத்து மாதர்களோடு பழகிக் குலாவும் சந்தர்ப்பங்கள் அவளுக் குக் கிடைத்தன. அவர்கள் வாயிலாகவே அவர்க ளுடைய துன்பக்கதைகளைக் கேட்டுக் கேட்டு, விவாகத் தினால் ஏற்படும் பராதீனத்தில் அவளுக்குப் பின்னும் அதிகமாக வெறுப்பு உண்டாயிற்று. யஜ்தானியும் அவளுடைய சுதந்தரத்துக்கு எவ்விதத்திலும் இடை

யூறு செய்யவில்லை. 'பெண் சுதந்தரமானவள். அவளுக்கு இஷ்டம் இருந்தால் கல்யாணம் செய்து கொள்ளட்டும்; இல்லா விட்டால் கன்னியாகவே இருக்கட்டும். அவள் தனக்குத் தானே எஜமானி' என்று அவன் கருதினான். தன்னிடம் வந்த தூதுக களுக்கும், "இந்த விஷயத்தில் எனக்கு ஒன்றும் தெரியாது. அவள் தானே இதைப்பற்றி முடிவு செய்வாள்" என்று தெளிவாகப் பதில் சொல்லி விட்டான். ஓர் இளம்பெண் ஆண் வேஷத்தில் இருப் பதும், அவள் இளைஞர்களோடு கலந்து பழகுவதும் சமூகத்தில் ஆராய்ச்சிக்குரிய விஷயமாக இருந்தது. ஆனால் யஜ்தானியும் அவன் மனைவியும் அவள் தூய்மையில் மாறாத நம்பிக்கை வைத்திருந்தனர். ஹபீபின் ஒழுக்கத்திலோ நடவடிக்கையிலோ அவர்கள் எவ்விதத்திலாயினும் சந்தேகப்படக்கூடிய விஷயம் எதுவும் தென்படவில்லை. இளமைப் புயலிலும் ஆவலாகிய சுழற்காற்றிலுங்கூட, இருபத்துநான்கு வயசுள்ள அந்த வீரமங்கை, எல்லா இளைஞர்களும் அவளோடு கூடப் பிறந்த சொந்தச் சகோதரர்களோ என்று எண்ணும்படியாக, தன் இருதயத்தின் செல்வத்தைக் காத்துக்கொண்டு அசைக்கப்படாமலும் வெல்லப்படாமலும் நின்றாள்.

4

குஸ்துந்துனியாவாசிகள் தங்கள் சந்தோஷத்தை எவ்வளவு ஆர்ப்பாட்டமாகக் கொண்டாடினார்கள், அவர்கள் ஹபீபை எவ்வளவு மரியாதைகளோடு வரவேற்றார்கள், அவளுக்கு எத்தனை புகழ்மாலைகள்

சூட்டினார்கள் - என்பனவெல்லாம் எழுத்திலே அடங்கும் விஷயங்களல்ல. நேற்று நகரம் முழுவதும் நாசமாய்ப் போவதற்கு இருந்தது. இன்றும் அதன் மாளிகைகளிலும் கடைவீதிகளிலும் நெருப்பின் ஜ்வாலை கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருக்குமானால் அது அசாத்தியமான சம்பவமாக இருந்திராது. ராஜ்யத்தையும் நகரத்தையும் கற்பனைக்கும் எட்டாத அந்தப் பேராபத்திலிருந்து காப்பாற்றிய பெண் எத்தனை மரியாதைக்கும், அன்புக்கும், சிரத்தைக்கும், களிப்புக்கும் உரியவளாக இருந்திருப்பாள் என்பதைக் கற்பனையிலும் அறியமுடியாது. அவள்மீது எத்தனை மலர்களும், மாணிக்கங்களும், ரத்தினங்களும் வர்ஷிக்கப்பட்டன என்பதை ஒரு மகாவித்வான் அநுமானிக்க முடியும். நகரத்து மாதர்கள் தங்கள் இருதயங்களாகிய அக்ஷயப் பொக்கிஷங்களிலிருந்து ஆசீர்வாதங்களை வாரி வாரி அவள்மீது பொழிந்து, கர்வத்தினால் பொங்கிய அவள் முகத்தைக் கண்டு, தம்மைப் பாக்கியவதிகளாக எண்ணினார்கள். பெண் தெய்வங்களின் தலையை அவள் ஓங்க வைத்திருந்தாள்.

அன்றிரவு தைமூரின் மசோதாவைப் பற்றி ஆலோசனை நடந்தது. எதிரே மெத்தையிட்ட நாற்காலியில், வசீகரமான தோற்றமும், பரந்த சிந்தனையும், மங்காத தேஜஸும் உடையவனான யஜ்தானி வீற்றிருந்தான். அவனுடைய வலது பக்கத்தில் ஈரானிய உடைகள் அணிந்த அவன் மனைவி உட்கார்ந்திருந்தாள். அவள் கண்களில் இரக்கமும் நம்பிக்கையின் ஒளியும் நிரம்பியிருந்தன. இடது பக்கத்தில் அப்போது பெண் வேஷம் தரித்த மோகினியாகி,

பிரம்மசரியத்தின் ஒளி வீச, உம்மதுல் ஹபீப் அமர்ந் திருந்தாள்.

யஜ்தானி மசோதாவை எதிர்த்து, "என் சார்பாக நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. ஆனால் அபிப் பிராயம் சொல்லும் உரிமை எனக்கு உண்டென்றால், 'நீ இந்த மசோதாவை ஒருபோதும் அங்கீகரிக்க லாகாது' என்றே நான் தெளிவாகச் சொல்லுகிறேன். நீ யார் என்னும் விஷயம் தைமூருக்குத் தெரியாமல் வெகு நாட்கள் வரையில் மறைந்திருக்க முடியாது. அப்போது என்ன நிலைமை ஏற்படுமோ யார் கண்டது! இங்கே இந்த விஷயமாக என்ன என்ன வியாக்கியா னங்கள் செய்யப்படுமென்பதை என்னைக்காட்டிலும் நீ நன்றாக அறிவாய். இங்கே நானே நேரில் இருந்து எவனும் ஓர் அபவாதமும் சொல்ல வழியில்லாமல் வைத்திருந்தேன். ஆனால் அங்கே நீ தனியாக இருப்பாய்; அப்போது ஜனங்கள் மனத்துக்குத் தோன்றியபடி அபவாதங்கள் சுமத்துவதற்குச் சந்தர்ப் பங்கள் கிடைத்துக்கொண்டே இருக்கும்" என்று பேசினான்.

அவன் மனைவி சுயேச்சைக்கு அவ்வளவு மகத்து வம் கொடுக்க விரும்பவில்லை, "தைமூர் நல்லொ ழுக்கமுள்ள மனிதனல்லன் என்று நான் கேள்விப்பட் டிருக்கிறேன். நான் உன்னை எவ்விதத்திலும் போக விடமாட்டேன். ஏதாவது நடந்துவிட்டால் உலகம் முழுதும் சிரிக்கும். ஏற்கனவே சிரிப்பவர்கள் என்ன மட்டாகவா இருக்கிறார்கள்?" என்றாள்.

இவ்வாறு கணவனும் மனைவியும் வெகு நேரம் வரையில் ஸாதகபாதகங்களைப் பேசி, விதவிதமான

சந்தேகங்களைக் கிளப்பிக்கொண்டிருந்தார்கள். ஆனால் ஹபீப் மௌனம் சாதித்து உட்கார்ந்திருந்தாள். அவளும் தன் தீர்மானத்துக்கு ஒத்துவந்திருக்கிறாள் என்றே யஜ்தானி கருதினான். மசோதாவுக்கு மறுப்பை அறிவிக்க அவன் ஆசனத்திலிருந்து எழுந்தவுடனே, "நீங்கள் தைமூரிடம் என்ன சொல்லப்போகிறீர்கள் ?" என்று கேட்டாள் ஹபீப்.

"இதுதான் ; இங்கே தீர்மானமாயிற்றே ; இதைத் தான்."

"நான் இன்னும் ஒன்றும் சொல்லவே இல்லையே!"

"நீயும் என் தீர்மானத்தை ஒப்புக்கொண்டிருப்ப தாக நான் நினைத்தேன்."

"இல்லை, அப்பா. நீங்கள் அவரிடம் போய், நான் அந்தப் பதவியை ஏற்றுக்கொள்வதாகச் சொல் லுங்கள்."

தாய் மார்பின்மீது கைவைத்து, "இதென்னடி பெண்ணே, இப்படிச் செய்கிறாயே! உலகம் என்ன சொல்லுமென்று கொஞ்சமாவது எண்ணிப் பார்த் தாயா ?" என்றாள்.

யஜ்தானியும் தலையில் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்தார். மார்பில் குண்டு அடிபட்டவர்போல, அவர் வாயிலிருந்து ஓர் எழுத்தும் வெளிவரவில்லை.

ஹபீப் புருவத்தை நெளித்துக்கொண்டு, "அம்மா, நான் உங்கள் உத்தரவுக்கு எள்ளளவும் மீறிச் செல்ல விரும்பவில்லை. என்னைப் போகவிடுவதற்கோ போகாம லிருக்கச் செய்வதற்கோ உங்களுக்குப் பூர்ண அதிகாரம் உண்டு. ஆனால் உலகத்திலுள்ள ஜீவராசிகளுக் கெல்லாம் தொண்டு செய்வதற்கு இம்மாதிரியான

சந்தர்ப்பம் மீண்டும் என் வாழ்க்கையில் கிடைப்பது அரிது. இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிட்ட வருத்தம் ஆயுள் முழுதும் என்னைவிடாது. அமீர் தைமூரை நான் என் நல்லெண்ணத்தினுலும், தன்னலமற்ற தன்மையினுலும், கடமைகளை உண்மையாக நிறைவேற்றுவதனுலும் மனிதனுக்க முடியும் என்பதிலும், இனி அவன் கைகளால் கடவுளின் அடியார்களின் ரத்தம் இவ்வளவு வேகமாகப் பாயாமலிருக்கச் செய்யமுடியும் என்பதிலும் எனக்கு நம்பிக்கை உண்டு. அவன் அஞ்சா நெஞ்சன்; ஆனுல் இரக்கமற்றவனல்லன். எந்த அஞ்சா நெஞ்சனும் இரக்கமற்றவனுக இருக்க முடியாது. அவன் இதுவரையில் செய்ததெல்லாம் குருட்டு மதாவேசத்தில் செய்திருக்கிருன். இன்று ஆண்டவன், 'மதம் என்பது தொண்டு செய்தல்; கொள்ளையும் கொலையும் அன்று' என்பதை நான் தைமூருக்குக் காட்டும்படியான அரிய சந்தர்ப்பத்தை எனக்கு அளித்திருக்கிருர். என் விஷயத்தில் எனக்குத் துளியும் சந்தேகம் இல்லை. என்னை நான் காத்துக்கொள்ளமுடியும். என் கடமையை ஒழுங்காகச் செய்துமுடித்து, எதிரிகளின் நாக்கையும் என்னுல் அடக்க முடியும் என்பதை நான் அறைகூவிச் சொல்லுகிறேன். ஒருவேளை நான் வெற்றி பெற முடியாமற் போவதாகவே நினைத்துக்கொள்ளுங்கள்; அப்போதும், உண்மைக்காகவும் உரிமைக்காகவும் பலியாவது வாழ்க்கையின் மிகவும் கௌரவமான வெற்றியன்ருே? இதுவரையில் நான் எந்தச் சித்தாந்தத்தோடு வாழ்க்கையை நடத்தினேனே, அது என்னை ஏமாற்றவில்லை; அதன் மகிமையால்தான், பெரிய பெரிய மகான்களெல்லாரும் தம் வாழ்க்கையில்

ஒரு கனவென்று கருதும் இப்படிப்பட்ட பதவி இன்று எனக்குக் கிடைத்திருக்கிறது. இவ்விதமாகப் பரீக்ஷித்துப் பார்த்து அதில் தேறிய நண்பன்போன்ற என் கொள்கை என்னை ஒருபோதும் ஏமாற்ருது. தைமூரின் முன்பு என் உண்மை வெளியாகிவிட்டாலுங்கூட எனக்கு என்ன பயம்? என் வாள் என்னைக் காக்க வல்லது. விவாகத்தைப்பற்றிய என் சிந்தனைகள் நீங்கள் அறிந்தனவே. என் ஆத்மா ஏற்றுக்கொள்ளும்படியான ஒரு மனிதன் - அவனுடலிலே என் நிலையை இழந்து, நான் என் ஆத்மாவை உயர்நிலைக்குக் கொண்டுபோகும்படியான ஒரு மனிதன் - எனக்குக் கிடைப்பானுயின், அவன் திருவடிகளில் விழுந்து, என்னை அவனுக்கு அர்ப்பணம் செய்வேன்" என்ருள்.

யஜ்தானி பெருமகிழ்ச்சியோடு பெண்ணைக் கழுத்தோடு அணைத்துக்கொண்டான். அவன் மனைவிக்கு அத்தனை சீக்கிரத்தில் சமாதானம் ஏற்படவில்லை. அவள் எவ்விதத்திலும் பெண்ணைத் தனியாக விடச் சம்மதிக்கவில்லை. "நானும் அவளோடு கூடவே போவேன்" என்ருள்.

5

மாதங்கள் பல சென்றன. இளைஞன் ஹபீப் இப்போது தைமூரின் வஜீர். ஆனுல் உண்மையில் பாதுஷாவே அவன்தான். தைமூர் அவன் கண்களால்தான் பார்க்கிருன்; அவன் காதுகளால்தான் கேட்கிருன்; அவன் அறிவைக்கொண்டுதான் சிந்தனை செய்கிருன். ஹபீப் அறுபது நாழிகையும் தன் அருகிலேயே இருக்கவேண்டும் என்பது தைமூரின் விருப்பம்.

அவனுடைய அண்மையில், தைமூருக்குத் தான் ஸ்வர்க்கத்தில் இருப்பதுபோன்ற இன்பம் கிடைக்கிறது. அவனைக் கண்டு பொறுமைப்படும் பிராணி ஒருவனுவது ஸமர்கந்தில் இல்லை. அவன் நடந்துகொள்ளும் விதம் எல்லோரையும் மோகிக்கச் செய்தது. நியாயத்திலிருந்து அவன் கடுகளவும் பின்வாங்காததுதான் அதற்குக் காரணம். அவன் கைகளில் ஓடும் நியாய யந்திரத்தில் அறைபட்டவர்கள்கூட அவனிடம் நல்லபிப்பிராயமே வைத்திருந்தார்கள்; ஏனெனில் அவன், நியாயத்தைத் தேவைக்கு அதிகமாகக் கசப்பாக்க விடுவதில்லை.

மாலை நேரம். அரசாங்க உத்தியோகஸ்தர்கள் தத்தம் வேலைகளை முடித்துப் போய்விட்டார்கள். ஆல் விளக்கில் மெழுகுவத்திகள் எரிந்துகொண்டிருந்தன. காரகிலின் நறுமணம், மந்திரியின் காரியாலயம் முழுவதிலும் கமழ்ந்துகொண் டிருந்தது. ஹபீபும் எழுந்துபோவதற்கு இருந்தான்; அதற்குள் வில்லைச் சேவகன் வந்து, “ஹுஜூர், பாதுஷா அவர்கள் இங்கே விஜயம் செய்கிறுர்கள்” என்றுன்.

ஹபீபுக்கு இந்தச் செய்தியால் சந்தோஷம் உண்டாகவில்லை. மற்ற மந்திரிகளைப்போல அவன் தைமூரின் அன்பைப் பெறுவதற்காக ஏங்குபவனன்று. எப்போதும் தைமூரினிடமிருந்து விலகி இருக்கவே அவன் முயலுகிறுன். ராஜாங்க விருந்துகளில் அவன் ஒருபோதும் உண்ண வருவதில்லை. தைமூரின் கச்சேரிகளிலும் எப்போதும் கலந்துகொள்வதில்லை. தனக்கு ஓய்வு கிடைக்கும்போது, தனிமையில் தன் தாயிடம் உட்கார்ந்து நாள்முழுதும் நிகழ்ந்த செய்தியை அவ

ளிடம் சொல்லுவான்; அவள் அதன்மீது தன் சம்மத மாகிய முத்திரையை வைப்பாள்.

வாசலில் சென்று அவன் தைமூரை வரவேற்ருன். தைமூர் உயர்ந்த ஆசனத்தில் உட்கார்ந்துகொண்டே, "ஹபீப், நீ இந்த இளமையில் துறவிகளைப்போன்ற வாழ்க்கையை எப்படி நடத்துகிருய் என்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. கடவுள் உனக்கு அளித் திருக்கும் ரூபலாவண்யமோ -? உலகத்துக்கெல்லாம் அழகிலும் அழகியான மோகனங்கியும் உன்னைத் தன் காதலனுகப் பெற்ருல் தன்னைப் பாக்கியவதியென்று கருதுவாள். இது உனக்குத் தெரியுமோ தெரியாதோ என்பதை நான் அறியேன்; நீ உன் கருநிறக் குதிரை மீது ஏறி வீதிவழியே செல்லும்போதெல்லாம், ஸமர் கந்தின் ஜன்னல்களில் ஆயிரமாயிரம் கண்கள் உன் னுடைய ஒரு மின்னல் பார்வையைக் காணவேண்டு மென்று ஆவலோடு உட்கார்ந்திருக்கின்றன; ஆனல் ஒரு கண்ணும் நீ எந்தப் புறமும் விழி வீசப் பார்க்க வில்லை. உன் அடிகள் செல்லும் பாதையிலேயே நடக்கவேண்டுமென்று நான் எவ்வளவோ விரும்பு கிறேன் - இது நான் கடவுள் சாட்சியாகச் சொல்லு கிறேன் -; ஆனல் உலகம் என் பிராணனை வாங்கு கிறது. நீ உன் பவித்திர வாழ்க்கையின் அற்புதத்தை என்மீது வீசமாட்டாயா? நீ உலகத்தில் வாழ்ந்தும் அதிலிருந்து வேறுபட்டிருக்கிருயே; அதுபோலவே நானும் இருக்க விரும்புகிறேன். ஆனல் என்னிடம் அந்த மனம் இல்லை; அந்த மூளை இல்லை. நான் எப்போதும் என்மீதும், முழு உலகத்தின்மீதும் பற்களை நெறித்துக்கொண்டு சினந்தவண்ணமாக இருக்கிறேன்.

ஒவ்வொரு நிமிஷமும் ரத்தவேட்கை என்னை வாட்டு கிறது; இன்னும் நீ அதைத் தணிக்கவில்லை. நீ இப்போது செய்வதைக்காட்டிலும் அதிக நன்ருக வேறு யாரும் செய்துவிட முடியாது என்பதை அறிந் திருந்தும், என் கோபத்தை என்னுல் வசப்படுத்த முடியவில்லை. நீ போகுமிடமெங்கும் அன்பையும் ஒளி யையும் பரப்புகிருய். உனக்கு எதிரியாக இருக்க வேண்டியவனும் உன் நண்பனுகிருன். நான் போகுமிட மெல்லாம் வெறுப்பையும் சந்தேகத்தையும் பரப்பிக் கொண்டே போகிறேன். எனக்கு நண்பனுக இருக்க வேண்டியவன்கூட என் எதிரியாகிருன். அகில உல கத்திலும் இதோ, இந்த ஒரே இடத்தில்தான் எனக்கு ஒளி கிடைக்கிறது. 'இந்த ராஜமகுடமும் அரியணையுமே உன் வழிக்கு இடையூறுகள்' என்று நீ சொல்லுவா யாயின், அல்லா ஆணையாக, இன்றே இவைகளைக் காலால் உதைத்துத் தள்ளுவேன். 'நான் உண்மையான ஆனந்தத்தைப் பெறுவதற்கான நல்வழியை நீ காட்ட வேண்டும்' என்று மனு எழுதிக்கொண்டுதான் நான் இன்று உன்னிடம் வந்திருக்கிறேன். நான் உன்னிட மிருந்து உண்மையான வாழ்க்கையைக் கற்றுக்கொள் ளும்பொருட்டு நீ இந்த அரண்மனையிலேயே வசிக்க வேண்டும் என்பது என் விருப்பம்" என்ருன்.

ஹபீபின் உள்ளம் திக்திக்கென்று அடித்துக் கொண்டது. ஒருவேளை தன் பெண்மை ரகசியம் அமீருக்குத் தெரிந்திருக்குமோ என்ற சந்தேகமும் பிறந்தது. தான் அவனுக்கு என்ன பதில் சொல்வது என்பதும் விளங்கவில்லை. அவனுடைய மென்மையான உள்ளம் தைமூரின் அந்த இரக்கப்படத்தக்க சுய

வெறுப்பைக் கண்டு இளகியது. எவன் பெயரைக் கேட்டதுமே உலகமெல்லாம் நடுநடுங்குகிறதோ அந்தத் தைமூர், அவள் முன்பு பரிதாபகரமாக ஒரு யாசக ஞகி, அவளிடமிருந்து ஒளிப்பிச்சை கேட்கிறுன்! தைமூரின் கடுமையும், விகாரமும், வறட்சியும், ஹிம்சையும் கொண்ட அந்தத் தோற்றத்தில், இளக்கமும் மதுரமும் வாய்ந்த ஒரு சோதி அவளுக்குத் தென்பட்டது. அவனுடைய விழிப்புள்ள விவேகம் உள்ளிருந்து எட்டிப் பார்ப்பதுபோல அவளுக்குத் தோற்றியது, மேலெழும்பும் தூண்டுதல் மிச்சமே இல்லாத தன்னுடைய ஸ்திரமான வாழ்க்கை, இந்தப் பயனற்ற முயற்சியின் முன்பு துச்சமானது என்றே அவளுக்குப் பட்டது.

ஹபீப் உள்ளங் கவரும் குரலில், "பாதுஷா அவர்கள் இந்த அடிமையினிடம் இவ்வளவு மரியாதை வைத்திருப்பது என் பாக்கியமே. ஆனுல் நான் பாதுஷாவின் அரண்மனையில் வசிப்பது உசிதமல்ல" என்ருன்.

தைமூர், "ஏன்?" என்று கேட்டான்.

"ஏனெனில், பணம் அதிகமாக இருக்குமிடத்தில் கொள்ளைகள் நிகழும்; மரியாதைகள் ஏராளமாக இருக்குமிடத்தில் எதிரிகளும் ஏராளமாகவே இருப்பார்கள்."

"உனக்கு எதிரியாகக்கூட எவனுவது இருக்க முடியுமா?"

"எனக்கு நானே எதிரியாகிவிடுவேன். மனிதனுக்கு எல்லாவற்றிலும் பெரிய சத்துரு அகங்காரம்."

தைமூருக்கு நவநிதி கிடைத்தாற்போல இருந்தது. அவன் தன் மனம் திருப்தியடைந்ததை உணர்ந்தான். 'மனிதனுக்கு எல்லாவற்றிலும் பெரிய சத்துரு அகங்காரம்' என்ற வாக்கியத்தை மனத்துக்குள் உருவேற்றிக்கொண்டே, "நீ எப்போதும் என் வசத்துக்கு வரமாட்டாய், ஹபீப்! ஆகாயத்திலேயே பறந்துகொண்டிருக்கும் பறவை நீ. பறவையைப் பொற்கூட்டில் வைக்க விரும்பினாலும் அது படபடவென்று சிறகுகளை அடித்துக்கொள்ளும். சரி; நான் போய் வருகிறேன். கடவுள் துணை" என்றான்.

தான் பெற்ற அந்த ரத்தினத்தைப் பாதுகாப்பான இடத்தில் வைக்க விரும்புபவன் போல, அவன் உடனே அரண்மனைக்குச் சென்றான். இந்த வாக்கியத்தை அவன் இன்றுதான் முதல் தடவையாகக் கேட்டான் என்பதில்லை; ஆனால் இதில் இன்று அவனுக்குக் கிடைத்த ஞானமும் கட்டளையும் நல்லுணர்ச்சியும் என்றும் கிடைத்ததில்லை.

6

இஸ்த்கர் பிராந்தியத்திலிருந்து கலகச் செய்தி வந்திருக்கிறது. தைமூர் அங்கே சென்று ஜனங்களைக் கொலை செய்யாமலிருக்க வேண்டுமே என்று ஹபீபுக்குப் பயம். அவன் அமைதியான உபாயங்களினால் இந்தக் கலகத்தை அடக்கி, நல்லுணர்ச்சியில் உள்ள சக்தியைத் தைமூருக்குக் காட்ட விரும்புகிறான். தைமூருக்கு அவனைக் கலகம் நடக்கும் இடத்துக்கு அனுப்ப இஷ்டமில்லை; ஆனால் ஹபீபின் வற்புறுத்தலினால் அவன் வேறு வழியில்லாதவனாய் இருக்கிறான்.

ஹபீபுக்கு வேறு ஒரு யுக்தியும் தோன்ருமற் போகவே, “இந்த அடிமை இருக்கும் வரையில் பாதுஷா தம் உயிருக்கு ஆபத்தான வேலையைச் செய்யலாகாது” என்ருன்.

தைமூர் மந்தகாசம் புரிந்தான். “ஹபீப், என் உயிர் உன் உயிருக்கு முன்பு ஒரு பொருளே இல்லை. மேலும் நான் எப்போதுமே என் உயிரைப்பற்றிக் கவலை கொண்டதில்லை. உலகத்தில் நான் படுகொலையையும் கொள்ளையையும் தவிர வேறு என்ன நினைவான அடையாளங்கள் விட்டுவைத்திருக்கிறேன்! நான் செத்தபின்பு உலகம் என் பேரைச் சொல்லி அழாது; இதை நிச்சயமாக அறிந்துகொள். என் போன்ற கொள்ளைக்காரர்கள் எப்போதும் தோன்றிக் கொண்டே இருப்பார்கள். ஆனல், உன் எதிரிகள் உன்னை ஏதாவது செய்துவிட்டால்-கடவுள் கிருபையில் அப்படி ஒன்றும் ஆகவேண்டாம் - இந்த ஸாம்ராஜ்யம் மண்ணில் கலக்கும். அப்போது எனக்கும் மார்பில் கத்தியைச் செருகிக்கொள்வதைத் தவிர வேறு வழி இராது. ஹபீப், நான் உன்னிடமிருந்து என்ன என்ன பெற்றேன் என்பதை என்னல் சொல்ல முடியாது. ஏழெட்டு வருஷங்களுக்கு முன்னலேயே நீ எனக்குக் கிடைத்திருந்தால் எவ்வளவு நன்ருக இருந்திருக்கும்! அப்போது தைமூர், சரித்திரத்தில் இவ்வளவு கொடுமையான சுபாவமுள்ளவனுக இருந்திருக்கமாட்டான். தேவையாயிருந்தால் இன்று நான் என்னைப் போன்ற நூறு தைமூர்களை உனக்காக அர்ப்பணம் செய்வேன். நீ உன்னேடுகூடவே என் உயிரையும் எடுத்துச் செல்லுகிருய் என்பதை அறிந்துகொள்.

இன்று நான் உன்னிடம் சொல்லுகிறேன், ஹபீப்; நான் உன்னைக் காதலிக்கிறேன். இன்றுவரையில் எந்த அழகியினிடமும் இவ்விதக் காதல் எனக்கு உண்டானதில்லை. காதல் என்பது என்ன பொருள் என்பதை இப்போதுதான் நான் அறிந்திருக்கிறேன். ஆனால், நானும் உன்னோடுகூடவே வருவதில் என்ன கெடுதி ?" என்றான்.

ஹபீபின் நெஞ்சம் திடுக்கிட்டது. "தாங்கள் வர வேண்டிய அவசியம் இருந்தால் நான் அறிவிப்பேன்" என்றான்.

தைமூர் தாடியில் கை வைத்துக்கொண்டு, "உன் இஷ்டம். ஆனால் ஒவ்வொரு நாளும் செய்தியை அனுப்பிக்கொண்டே இரு. இல்லாவிடில் நான் மனங்கலங்கி அங்கே வந்துவிடுவேன்" என்றான்.

தைமூர் மிகவும் அன்போடு ஹபீபின் பிரயாணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்தான். எல்லாவிதமான சௌகரியங்களையும் தேவையான பொருள்களையும் அவனுக்காகச் சேமித்தான். அந்தக் கோஹிஸ்தானில் (மலைப் பிரதேசத்தில்) இந்தப் பொருள்களெல்லாம் அவனுக்கு எப்படிக் கிடைக்கும்? தாய் தன் பெண்ணைக் கணவன் வீட்டுக்கு அனுப்புவதுபோல, அவன் தயாரிப்பிலே முனைந்திருந்தான்.

ஹபீப் சேனாவீரர்களோடு செல்லும்போது ஸமர்கந்த் முழுவதும் அவனோடுகூடவே இருந்தது. தைமூர் கண்களில் ருமாலை வைத்துக்கொண்டு, அடிபட்ட பறவைபோல் தலைதொங்க அரியணையில் அமர்ந்திருந்தான்.

இஸ்த்கர் அர்மீனியக் கிறிஸ்தவர்களின் பிராந்தியம். முகம்மதியர்கள் அவர்களைத் தோற்கடித்து அங்கே தமது அதிகாரத்தை நிலைநாட்டியதுமன்றி, ஒவ்வொரு நிமிஷமும் அவர்கள் தம் பராதீனத்தை உணரும்படியான விதிகளையும் ஏற்படுத்தினர்கள். ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஜஜியா வரி கொடுக்க வேண்டும் என்பது முதல் விதி. முகம்மதியர்களுக்கு இந்த வரி இல்லை. மாதா கோயில்களில் மணி அடிக்கக் கூடாது என்பது இரண்டாவது விதி. முகம்மதியர்கள் பாவமென்று கருதிய மதுபானத்தைத் தடுத்தல் மூன்ருவது விதி. கிறிஸ்தவர்கள் இந்த விதிகளைச் செய்கையில் எதிர்த்தார்கள். முகம்மதிய அதிகாரிகள் ஆயுதபலத்தை உபயோகிக்க விரும்பியபோது கிறிஸ்தவர்கள் கலகம் செய்தார்கள். முகம்மதியச் சுபேதார் கைது செய்யப்பட்டான். கோட்டைமீது கிறிஸ்துவக் கொடி பறந்தது.

ஹபீப் இங்கே வந்து இன்று இரண்டாவது நாள். ஆனல் இந்தச் சிக்கலை விடுவிப்பது எப்படி? அவனுடைய பரந்த உள்ளம், 'கிறிஸ்தவர்களை இந்த விதிகளால் கட்டுப்படுத்துவதற்கு ஒன்றும் அர்த்தமே இல்லை. ஒவ்வொரு மதத்தையும் சமமாகவே ஆதரிக்க வேண்டும்' என்றது. ஆனல் முகம்மதியர்களோ இந்த நிபந்தனைகளை நீக்க ஒருபோதும் இணங்கமாட்டார்கள். ஒருவேளை அவர்கள் இணங்கினலும், தைமூர் அதை எப்படி ஒப்புக்கொள்வான்? அவனுடைய மதச் சிந்தனைகளில் சிறிது தாராளத் தன்மை உண்டாகியிருப்பது வாஸ்தவம்; ஆனல் இந்த நிபந்தனைகளை

நீக்க அவன் ஒருகணமும் இசையமாட்டான். ஆனால், கிறிஸ்தவர்கள் தமது மதச் சுயாதீனத்துக்காகப் போரிடுகிறார்கள் என்ற காரணத்தினால் ஹபீப் அவர்களைத் தண்டிப்பதா? தான் உண்மையென்று அறிவதை அவன் எப்படிக் கொல்வது? இல்லை, இல்லை; அவன் சத்தியத்தைப் பாதுகாப்பான், அதன் முடிவு என்ன ஆனாலும் சரி. அவன் அளவுக்கு மிஞ்சிப் போவதாக அமீர் நினைப்பான். வேறு வழி இல்லை.

மறுநாள் காலையில் ஹபீப், "ஜஜியா நீக்கப் பட்டது. மதுபானத்தின்மீதும் மணிகளின்மீதும் ஒரு நிபந்தனையும் இல்லை" என்று பறைசாற்றி விளம்பரம் செய்தான்.

முகம்மதியர்களிடையே பெரிய கலவரம் ஏற்பட்டது. அவர்கள், "இது நாஸ்திகத்தனம்; சாஸ்திரத்துக்கு விரோதம். அமீர் தைமூர் தம் ரத்தத்தை வார்த்து வளர்த்த இஸ்லாமிய மதத்தின் வேரை, அவருடைய வஜீரான ஹபீப் பாஷாவே தம் கையால் பெயர்த்து எறிகிறார்!" என்றனர். பலடை மாறிப் போயிற்று. பாதுஷாவின் சேனை முகம்மதியர்களோடு கலந்துகொண்டது. ஹபீப் இஸ்த்கர் கோட்டைக்குள் புகுந்துகொண்டான். பாதுஷாவின் சேனையும் சேர்ந்ததால் முகம்மதியர்களின் வலிமை அதிகமாயிற்று. ஹபீப் தைமூருக்கு எதிராகக் கலகம் செய்வதாக நினைந்து, அவர்கள் கோட்டையைச் சூழ்ந்துகொண்டார்கள். தைமூருக்கு இதை அறிவிக்கவும், நிலைமைகளை நேரில் எடுத்துரைக்கவும் ஒரு செய்தியாளை உடனே அனுப்பினார்கள்.

பாதி இரவு கழிந்துவிட்டது. தைமூருக்கு இரண்டு நாட்களாக இஸ்த்கரிலிருந்து ஒரு செய்தியும் கிடைக்கவில்லை. அவன் மனத்தில் பலவிதமான சந்தேகங்கள் உதித்தன. 'நான் ஏன் ஹபீபைத் தனியாக அனுப்பினேன்? அவன் ராஜநீதியில் கெட்டிக் காரன் என்பது உண்மை; ஆனால் கலகம் அதிகரித்தால் இந்தச் சிறிதளவு மனிதர்களை வைத்துக்கொண்டு அவன் என்ன செய்ய முடியும்? கலகமோ கட்டாயம் வளர்ந்தே தீரும். அங்குள்ள கிறிஸ்தவர்கள் ஆபத்தின் தூதர்கள். தைமூரின் வாள் துருப்பிடித்துப் போயிற்று என்பதும் அவனுக்கு அரண்மனை வாழ்க்கை இப் போது அதிகப் பிரியமாகிவிட்டது என்பதும் அவர் களுக்குத் தெரிந்தால் அவர்களின் தைரியம் இருமடங் காகும். ஹபீபை ஒருவேளை எதிரிகள் சூழ்ந்து கொண்டால் பெரிய பிரமாதமாகப் போகும்' என்று அவன் மனம் எண்ணமிடலாயிற்று.

அவன் முழங்கால்மீது கையை வைத்து, வேறு விதமாக உட்கார்ந்து, தன்மீதே நொந்துகொண்டான். அவன் ஏன் இவ்வளவு தைரியஹீன னாகிவிட்டான்? அவன் ஒளியும் சௌரியமும் அவனை விட்டுப் போயினவா? எவன் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் எதிரிகள் நடுநடுங்குவார்களோ, அவன் இன்று முகத்தை மூடிக்கொண்டு அரண்மனையில் உட்கார்ந் திருக்கிறான். உலகம் இதைக் கண்டு, "தைமூர் இப்போது ரணகளத்தின் சிங்கமல்ல; ரத்தினக் கம்பளம் தரித்த சிங்கமானான்" என்ற ஒரே அர்த்தந்

தான் செய்துகொள்ளும். 'ஹபீப் மனிதனின் தீய குணங்களை அறியாத தேவதூதன். இரக்கத்துக்கும், தூய மனத்துக்கும், சுயநலமின்மைக்கும் தெய்வமாக இருப்பவனுக்கு, மனிதன் எவ்வளவு "சைத்தான்" ஆகமுடியும் என்பது எப்படித் தெரியும்? சமாதான நாட்களில் வேண்டுமானால், இவ்விஷயங்கள் சமூகத்தையும் தேசத்தையும் முன்னேற்ற மார்க்கத்துக்குக் கொண்டுபோகலாம்; ஆனால் சண்டையில் - சைத்தானின் ஆவேசம் புயல்போலக் கிளம்பும் சமயத்தில் - இந்த நற்குணங்களுக்கு இடம் இல்லை. அந்தச் சமயத்தில் எவனொருவன் மனித ரத்தத்தைக் கொண்டு குங்கும நீர் பாய்ச்சும் விளையாட்டு விளையாடுகிறானோ, வயல்களையும் நெற்களங்களையும் சொக்கப்பனை கொளுத்துகிறானோ, காட்டை நாடாக்கி, நாட்டைப் பாழ்நிலமாக்குகிறானோ அவன்தான் வெற்றிவாகை சூடுவான். சமாதான காலத்துச் சட்டங்கள் போர்ச் சட்டங்களினின்றும் முற்றும் வேறுபட்டன' என்ற சிந்தனைகளில் அவன் ஆழ்ந்திருந்தான்.

திடீரென்று வாயிற்காப்போன் உள்ளே வந்து இஸ்த்கரிலிருந்து செய்தியாள் வந்திருப்பதாக அறிவித்தான். செய்தியாள் பாதுஷாவின் எதிரே வந்து பூமியை முத்தமிட்டு ஒரு புறமாக மரியாதையோடு நின்றான். தைமூர் இருந்த அந்தப் பயங்கரமான நிலையைக் கண்டு அவன் தான் சொல்லவந்த செய்தியை முற்றும் மறந்துவிட்டான்.

தைமூர் புருவங்களை நெறித்து, "என்ன செய்தி கொண்டுவந்தாய்? மூன்று நாட்கள் கழித்து நீ இப்போதுதான் வந்திருக்கிறாய்; அதுவும் இவ்வளவு

நேரம் கழித்து இந்த நடுராத்திரியில்! ஏன் இத்தனை தாமதம்?" என்று கேட்டான்.

செய்தியாள் மீண்டும் பூமியை முத்தமிட்டு, "ஆண்டவரே, வஜீர் அவர்கள் ஜஜியாவை நீக்கி விட்டார்கள்" என்றான்.

"என்னடா சொல்லுகிறாய்? ஜஜியாவை நீக்கி விட்டார்களா?" என்று தைமூர் கர்ஜித்தான்.

"ஆமாம், ஆண்டவரே!"

"யாரடா அப்படிச் செய்தது?"

"வஜீர் சாகப்."

"யார் உத்தரவால்?"

"தமது உத்தரவினாலேயே, ஹுஜூர்!"

"ஹூம்."

"மேலும் ஹுஜூர், மதுபானத்துக்கும் அநுமதி அளித்துவிட்டார்."

"ஹூம்."

"மாதாகோயில்களில் மணி அடிக்கவும் உத்தரவு தந்துவிட்டார்."

"ஹூம்."

"அதற்கு மேலும், ஆண்டவரே, கிறிஸ்தவர்களுடன் சேர்ந்து முகம்மதியர்களின்மீது போரும் தொடுத்துவிட்டார்."

"அதற்கு நான் என்ன செய்வது?"

"ஹுஜூர் எங்கள் தலைவர். எங்களுக்குக் கொஞ்சமாயினும் உதவி கிடைக்காவிட்டால் அங்கே ஒரு முகம்மதியன்கூட உயிரோடு மிஞ்சமாட்டான்."

"ஹபீப் பாஷா இப்போது எங்கே இருக்கிறார்?"

"இஸ்த்கர் கோட்டையில், ஹுஜூர்."

"முகம்மதியர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள்?"

"நாங்கள் கிறிஸ்தவர்களைக் கோட்டைக்குள் சூழ்ந்துகொண்டிருக்கிறோம்."

"அவர்களோடு கூடவே ஹபீபையும் சூழ்ந்து கொண்டிருக்கிறீர்களா?"

"ஆமாம், ஹுஜூர்! அவர் ஹுஜூருக்கு எதிராகக் கலகக்காரராகிவிட்டார்."

"அதற்காக என் கீழ்ப் பணியும் இஸ்லாமியத் தொண்டர்கள் அவரைக் கைது செய்து வைத்திருக்கிறார்களோ? நான் அங்கே போவதற்குள் அவரைக் கொலையும் செய்து விடுவார்கள்போல இருக்கிறதே? விலகிப் போடா துஷ்டா, என் எதிரிலிருந்து! ஹபீப் என் வேலைக்காரனென்றும், நான் அவனுக்கு எஜமானனென்றும் முகம்மதியர்கள் நினைக்கிறார்கள். அது தவறு; அது பொய். இந்த ஸாம்ராஜ்யத்துக்கு அதிநாயகன் ஹபீப்; தைமூர் அவனுக்கு எளிய அடிமை. அவனுடைய தீர்ப்பில் தைமூர் கைவைக்க முடியாது. சந்தேகமின்றி ஜஜியா நீக்கப்படவேண்டும். பிற மதத்தினர்களின் மத நம்பிக்கைக்காக அவர்களிடமிருந்து அபராதப் பணம் பெற எனக்கு ஓர் அதிகாரமும் இல்லை; ஓர் உரிமையும் இல்லை. மசூதியில் அஜான் (நமாஜின் சமயத்தைக் குறிக்க முல்லாக்கள் கூவும் மந்திரோச்சாரணம்) கூவும்போது மாதாகோயிலில் மணி ஏன் அடிக்கலாகாது? மணியோசையில் மத விரோதம் இல்லை. தெரிகிறதா, அடே துஷ்டா! மணியின் ஓசையில் மத விரோதம் இல்லை. பிறருடைய உரிமைகளைக் கவர்கிறானே, ஏழைகளை வருத்துகிறானே,

பித்தலாட்டமும் ஏமாற்றமும் செய்கிறானே, சுயநல முள்ளவனாக இருக்கிறானே - அவன்தான் காபிர். மண்ணிலோ அல்லது கல்லின் துணுக்கிலோ அல்லாவின் ஒளியைக் காண்பவனும், ஆறுகளிலும் மலைகளிலும், மரங்களிலும் புதர்களிலும், அல்லாவின் பரமாத்மத் தன்மையை உணருபவனும் காபிர் அன்று. அல்லா மசூதிக்குள் அடைபட்டிருப்பதாக எண்ணும் என்னையும் உன்னையும் விட அவனுக்குக் கடவுளிடம் பக்தி அதிகம். மதத்துக்கு விரோதமாக நான் ஏதோ உளறுகிறேன் என்று நீ நினைக்கிறாயா? எவனையும் காபிர் என்று நினைப்பதே மத விரோதம். நாம் எல்லோரும் அல்லாவுக்கு அடிமைகள் - எல்லோரும். சரி, போ. அந்தக் கலகக்கார முகம்மதியர்களிடம் உடனே முற்றுகையை நீக்கிவிடவேண்டுமென்றும், இல்லாவிட்டால் தைமூர் பிரளயகாலம்போல் வந்து சேருவானென்றும் சொல்லு.''

செய்தியாள் மதியிழந்தவன்போல அங்கேயே நின்றுகொண்டிருந்தான். அதற்குள் வெளியே ஆபத்துச் சங்கு ஊதியது. தைமூரின் சேனைகள் யுத்த யாத்திரைக்கு ஆயத்தங்கள் செய்யலாயின.

9

மூன்றும் நாள் தைமூர் இஸ்த்கருக்குப் போய்ச் சேர்ந்தபொழுது, கோட்டைமீதிருந்த முற்றுகை நீக்கப் பட்டிருந்தது. கோட்டையில் குண்டுகள் அவனை வர வேற்றன. தைமூர் கிறிஸ்தவர்களைத் தண்டிக்க வந்திருப்பதாக ஹபீப் நினைத்தான். கிறிஸ்தவர்கள் பயத்தால் நடுநடுங்கிப் போயினர்; ஆனால் ஹபீப்

எதிர்ப்பதற்குத் தயாராக இருந்தான். கிறிஸ்தவர்களின் உரிமைகளைக் காப்பதில் தன் உயிரே போய் விட்டாலும் அவனுக்குத் துன்பம் இல்லை. இவ் விஷயத்தில் எவ்விதமான ஒப்பந்தமும் செய்துகொள்ள முடியாது. தைமூர் தன் வாள்வலியை உபயோகிக்க விரும்பினுல், வாள்வலியாலேயே அதற்குப் பதில் கொடுக்கப்படும்.

ஆனல் இது என்ன! பாதுஷாவின் சேனை வெள்ளைக்கொடி காட்டுகிறது. தைமூர் போரிடுவதற்கு அல்ல; சமாதானம் செய்துகொள்ள வந்திருக்கிருன். அவனுடைய வரவேற்பு இனி வேறு விதமாக நடக்கும். கிறிஸ்தவ ஸர்தார்களோடுகூட ஹபீப் கோட்டைக்கு வெளியே வந்தான். தைமூர் தனியாகக் குதிரைமீதேறி வந்துகொண்டிருந்தான். ஹபீப் குதிரையினின்றும் இறங்கி அவனை வணங்கினுன். தைமூரும் குதிரையின் முதுகிலிருந்து இறங்கினுன். ஹபீபின் நெற்றியை முத்தமிட்டு, "நடந்தது எல்லாவற்றையும் நான் கேட்டாயிற்று, ஹபீப்! நீ செய்தது மிகவும் சரி; உன்னைத் தவிர வேறு யாரும் செய்யமுடியாத காரியத்தையே நீ செய்தாய். ஜஜியா வாங்கவோ அல்லது கிறிஸ்தவர்களின் மத உரிமையைக் கவரவோ எனக்கு ஓர் அதிகாரமும் இல்லை. நான் இன்று தர்பார் கூட்டி இந்த விஷயங்களை ஆதரித்துப் பேசி நிலை நாட்டுவேன். அதற்கப்புறம் என் மனத்தில் வெகு நாட்களாகத் தோன்றிக்கொண்டிருக்கும் ஓர் ஏற்பாட்டையும் செய்வேன். நீ அதை ஒப்புக்கொள்வாய் என்பது என் நம்பிக்கை; ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும்" என்ருன்.

ஹபீபின் முகக் களை மாறியது. 'ஒரு வேளை உண்மை வெளியாகிவிட்டதா என்ன? அது என்ன ஏற்பாடு?' என்று அவன் மனம் குழம்பியது.

தைமூர் சிரித்துக்கொண்டே, "நீ என்னோடு போரிடத் தயாராக இருந்தாயா?" என்று கேட்டான்.

ஹபீப் வெட்கத்தோடு, "உரிமையின் முன்பு அமீர் தைமூருக்குக்கூட ஒன்றும் சாயாது" என்றான்.

"சந்தேகமில்லாமல்! உன்னிடம் தேவதூதர்களின் மனம் இருக்கிறதென்றால், சிங்கங்களின் தைரியமும் கூடவே இருக்கிறது; ஆனால், தைமூர் உன் தீர்மானத்தை ரத்து செய்ய முடியும் என்று நீ ஏன் நினைக்கவேண்டும்? இதுதான் எனக்கு வருத்தமாக இருக்கிறது. "ஸாம்ராஜ்யம் ஒரு தனி மனிதனுடைய சொத்து அன்று; அது ஒரு மரம். அந்த மரத்தின் ஒவ்வொரு கிளையும் - ஒவ்வோர் இலையும் - சமமான உணவைப் பெற்று வாழ்கிறது' என்பதை எனக்கு அறிவித்தவன் நீயே."

இருவரும் கோட்டைக்குள்ளே போனார்கள். சூரியாஸ்தமனமாகிவிட்டது. நிமிஷ நேரத்தில் தர்பார் கூடியது. அதில் தைமூர் கிறிஸ்துவர்களின் மத உரிமைகளை ஒப்புக்கொண்டான்.

நாலுபுறத்திலிருந்தும், "எங்கள் பாதுஷா நீடூழி வாழ்க!" என்ற குரல்கள் எழுந்தன.

தைமூர் மேலும் சொன்னான்: "நண்பர்களே, நான் இந்த ஆசிமொழிக்கு உரியவன் அல்ல. பலாத்காரமாக உங்களிடமிருந்து பறித்துக் கொண்ட பொருளை நான் திருப்பிக்கொடுத்ததால், வாழ்த்துக்கு உரிய வேலையொன்றும் செய்துவிடவில்லை. நான்

இத்தனை நாட்கள் வரையில் உங்களை உங்கள் உரிமை களிலிருந்து வஞ்சித்து வைத்ததற்காக நீங்கள் என்னைத் திரஸ்காரம் செய்வதே இதைக் காட்டிலும் சாலவும் சிறந்தது."

நாலு புறங்களிலிருந்தும், "பாதுஷாவின் கருணையே கருணை! கருணையே கருணை!!" என்ற குரல்கள் ஒலித்தன.

"நண்பர்களே, அந்த உரிமைகளோடு கூடவே நான் உங்கள் ராஜ்யத்தையும் உங்களுக்குத் திருப்பிக் கொடுக்கிறேன். ஏனெனில் அல்லாவின் திவ்யதிருஷ்டி யில் எல்லா மனிதர்களும் சமமானவர்கள். எந்தச் சமூகத்துக்கும் - எந்த மனிதனுக்கும் - மற்றொரு சமூகத்தின்மீது ஆட்சி செலுத்த அதிகாரம் இல்லை. இன்றுமுதல் நீங்களே உங்கள் பாதுஷாக்கள். நீங்களும் முகம்மதியக் குடிகளுக்கு அவர்களுடைய நியாயமான உரிமைகளை வழங்கத் தவறமாட்டீர்கள் என்று நான் நம்புகிறேன். ஏதாவது பலசாலியான ஜாதி உங்கள் உரிமைகளைக் கவர்வதற்கு முயலும் சந்தர்ப்பம் எப்போதாவது வருமாயின் தைமூர் உங்கள் உதவிக்கு எப்போதும் தயாராக இருப்பான்."

10

கோட்டைக்குள் ஆனந்தக் கொண்டாட்டம் முடிந்துவிட்டது. பிரபுக்களும் அதிகாரிகளும் விடை பெற்றுச் சென்றனர். அந்தரங்க ஆலோசனை சபையில் தைமூரும் ஹபீபும் மாத்திரமே இருக்கிறார்கள். ஹபீ பின் முகத்தில் இன்று முறுவல் ஒளி வீசுகிறது. இதுவரையிலும் அது தன் கம்பீரத்தன்மையின்கீழ்

அழுந்தியிருந்தது. இன்று அவன் கன்னங்களிலுள்ள செம்மையும், கண்களிலுள்ள கிறுக்கும், அவயவங்களிலுள்ள சஞ்சலத்தன்மையும் இதற்குமுன்பு எப்போதும் காணப்பட்டதில்லை. அவன் எத்தனையோ தடவை தைமூரோடு விளையாட்டாகப் பேசியிருக்கிறுன்; எத்தனையோ முறை பரிகாசம் செய்திருக்கிறுன். இன்று அவனுடைய பெண்மை உணர்ச்சி, பதவியையும் அதிகாரத்தையும் மறந்து, கொஞ்சிக் குலாவுகிறது.

தைமூர் திடீரென்று, "ஹபீப், நான் இன்று வரையில் உன்னுடைய ஒவ்வொரு பேச்சையும் ஒப்புக்கொண்டுவந்திருக்கிறேன். இப்போது நான் உன்னைக் கொண்டு செய்யப்போகும் ஓர் ஏற்பாட்டை நீ ஒப்புக்கொண்டே ஆகவேண்டும்" என்றுன்.

ஹபீப் திடுக்கிடும் நெஞ்சத்தோடு தலைகுனிந்து, "சொல்லுங்கள்" என்றுன்.

"முதலில் நீ ஒப்புக்கொள்வதாக வாக்குக்கொடு!"

"நான்தான் உங்கள் அடிமையாயிற்றே!"

"இல்லை; நீ எனக்கு எஜமானன், என் வாழ்க்கைக்கு ஒளி. உன்னிடமிருந்து நான் எத்தனை நற்குணங்களைப் பெற்றேன் என்பது உனக்குத் தெரியுமா? நான் இதுவரையிலும் ஸாம்ராஜ்யத்தை என் வாழ்க்கையில் எல்லாவற்றிலும் அதிகப் பிரியமுள்ள பொருளாக மதித்திருந்தேன். இதற்காக, செய்யக்கூடாதனவற்றையெல்லாம் செய்தேன். பிறர்களின் ரத்தத்தினுல் மட்டுமன்று, சொந்த மனிதர்களின் ரத்தத்தினுலும் இந்தக் கைகளில் கறை படியச் செய்தேன். என் வேலை இப்போது முடிந்துவிட்டது. நான் அஸ்திவாரம்

போட்டாயிற்று; இதன்மீது மாளிகை கட்டுவது உன் வேலை. இன்றையிலிருந்து நீ இந்த ராஜ்யத்துக்குத் தலைவனாகவேண்டும் - என் வாழ்க்கையிலும் சரி, நான் இறந்த பின்பும் சரி; இதுவே என் பிரார்த்தனை."

ஹபீப் ஆகாயத்தில் பறப்பதுபோல நடித்து, "ஐயோ! இத்தனை பெரிய பளுவா! என் தோள்களில் அவ்வளவு வல்லமை இல்லை" என்றான்.

தைமூர் கெஞ்சி வற்புறுத்தும் குரலில், "இல்லை, என் பிரிய நண்ப, என்னுடைய இந்த வேண்டுகோளை நீ ஒப்புக்கொண்டே தீரவேண்டும்" என்றான்.

ஹபீபின் கண்களில் இள நகை; இதழ்களில் கூச்சம். அவன் மெதுவாக, "சம்மதம்" என்றான்.

தைமூர் முகமலர்ச்சியோடு, "அல்லா உன்னை நீடூழி வாழ வைக்கவேண்டும்" என்றான்.

"ஆனால், ஹபீப் இன்னும் அறிவு முற்றாத ஒரு கன்னிப்பெண் என்பது உங்களுக்குத் தெரிந்துவிட்டால், அப்போது?"

"அப்போது அவள் என் ராஜ்யத்தோடு கூடவே என் உள்ளத்துக்கும் ராணி ஆவாள்."

"உங்களுக்கு இதனால் அடியோடு ஆச்சரியமே உண்டாகவில்லையா?"

"எனக்குத் தெரியும்."

"எப்போதிலிருந்து?"

"நீ முதல்முதலில் உன் குரூரக் கண்களால் என்னைப் பார்த்தாயே, அப்போதிலிருந்து."

"ஆனால், நீங்கள் அதை நன்றாக மறைத்தீர்களே!"

" நீதானே எனக்குக் கற்றுக்கொடுத்தாய் ? என்னைத் தவிர இங்கே வேறு யாருக்கும் இந்த விஷயம் தெரியாது."

" நீங்கள் எப்படித் தெரிந்துகொண்டீர்கள் ?"

தைமூர் மதமேறிய கண்களோடு பார்த்துக் கொண்டே, " அதைச் சொல்லமாட்டேன் !" என்றான்.

* * * *

இந்த ஹபீப்தான் தைமூரின் பேகம், ' ஹமீதா ' என்ற பெயரோடு பிரசித்தமாக விளங்கினாள்.

முற்றும்

புயல் - மஹாகவி டாகுர்

62 - அத்தியாயங்கள் : : மொழிபெயர்ப்பு

த. நா. குமாரஸ்வாமி, பி. ஏ.

மலிவுப் பதிப்பு ரூ. **5-0-0** ... உயரிய பதிப்பு ரூ. **6-0-0**

—— புகழ்மொழிகளிற் சில ——

ஆனந்த விகடன் :— * டாகுர் எழுதியுள்ள நவீனங்களுள் மிகச் சிறந்ததென்று கருதப்படும் 'புயல்' என்ற காதற் கதை, இப்போது வெகு அழகாகத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு உயர்ந்த முறையில் அச்சாகி வெளியாகியிருக்கிறது. * மனத்தைக் கவரும் விதமாக பைண்ட் செய்யப்பட்டிருக்கும் இப்பிரசுரம், புத்தகசாலைகளிலும் ஒவ்வோர் இல்லத்திலும் இருக்கவேண்டிய அரிய பொக்கிஷமாகும்.

சக்தி :— * இனிமையும் தெளிவும் இயல்புமான தெள்ளிய நடையில் மொழிபெயர்த்திருக்கிறார் அன்பர் குமாரஸ்வாமி. அச்சும் பதிப்பும் அருமையா யிருக்கின்றன.

ஹிந்துஸ்தான் :— * அற்புதமான நவீனம் 'புயல்'. அமிர்தம் போன்ற தமிழ்நடை டாகுரின் நவீனத்தைச் சிறப்புறச் செய்கிறது. மனத்துக்குத் திருப்தியளிக்கும் ஒப்பற்ற நவீனம்.

பாரததேவி :— * ஒவ்வோரு புத்தகசாலையிலும் வீட்டிலும் இருக்கவேண்டிய அரிய பொக்கிஷம்.

நாரதர் :— * இது ஓர் அழகிய வாழ்க்கைச் சித்திரம்.

The Hindu :— * The sympathetic treatment of the characters and the symmetrical development of the plot have been carefully dwelt upon. The Tamil rendering of the Novel is marked by clearness and precision.

The Mail :— * A great work by a great writer, *has been very well done* into Tamil. The dialogue is full of pen and interest. * The ending of the story is magnificent.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை

தமிழன்பர்களுக்கு அரிய விருந்து

கதைக் கோவை

தொகுதி I

40 எழுத்தாளரின்
40 சிறு கதைகள்

தொகுதி II

50 எழுத்தாளரின்
50 சிறு கதைகள்

தொகுதி III

60 எழுத்தாளரின்
60 சிறு கதைகள்

தொகுதி IV

75 எழுத்தாளரின்
75 சிறு கதைகள்

தொகுதி V

(தயாராகிறது)

அல்லயன்ஸ் கம்பெனி,

மயிலாப்பூர் : : சென்னை.

உடைந்த வளையல்

(‘து. ரா.’ எழுதிய சமூக நாவல்)

“வாழ்க்கையையே ஒரு கதையாகவும் காவியமாகவும் பார்க்கிறவர் - **து. ரா.**”

“உடைந்த வளைய”லும் ஒரு வாழ்க்கைச் சித்திரந்தான். “அந்தத் தபால்காரன் அந்த ஊருக்குப் புதிதாய் வந்தவன்” என்று வெகு சாதாரணமாக ஆரம்பிக்கிறது கதை. பின்னால் வரப்போகும் புயலுக்கு அறிகுறிதான் இந்த அமைதி. அந்நியோன்யமான தம்பதிகளின் அமைதியான இல்வாழ்க்கைப் பாதையிலே மதுரம் என்கிற பால்ய விதவை குறுக்கிடுகிறாள். சந்தேகப் பேய் தலைவிரித்தாடுகிறது. வதந்திகள், வம்புகள் பறக்கின்றன. பெயர் மதுரம்தான்! ஆனால் தங்கமணி - சுசீலாவின் வாழ்க்கையையே கசப்பாக்கி விடுகிறாள் அவள். நடுவில் பஞ்சு மாமா வேறு திடும்பிரவேசமாய் வந்து சிக்கலை அதிகப் படுத்துகிறார்.

ரசமான குடும்பக் காட்சிகளுடன் லேசான ஹாஸ்ய நடையில் எழுதிய கதை. கதாபாத்திரங்கள் ஜீவனுள்ள சிருஷ்டிகள். தெவிட்டாத கற்பனை. உங்கள் பிரதிக்கு முன்னதாகவே பதிவு செய்துகொள்க.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை

வாசகர்கள் போற்றும் எங்கள் வெளியீடுகள்

ஆரியமத உபாக்யானம் — I
ஆரியமத உபாக்யானம் — II
கதைக் கோவை — I
கதைக் கோவை — II
கதைக் கோவை — III
கதைக் கோவை — IV
ஆண்டாள் — மி. ஸ்ரீ.
ஔவையார் ,,
அன்னை கஸ்தூரி
அநுபமா
ஆனந்த மடம்
அமூல்யன்
அம்பலவாணன் — I & II
அழகி
இந்திரா
இரு மலர்கள்
இரு துருவங்கள் — காண்டேகர்
எரி நட்சத்திரம் ,,
உணவும் சுகவாழ்வும்
புயல் – மகாகவி டாகூர்
இளமைப் பருவம் ,,
கல்லின் வேட்கை ,,
சதுரங்கம் ,,
மாலினி ,,
தேவகி – குகப்ரியை
சந்திரிகா ,,
பிள்ளைவரம் – தூரன்
கனகாம்பரம்
கபாலகுண்டலா
கிருஷ்ணகாந்தன் உயில்
கன்யாகுமாரி
காட்டூர் ராமு
குழலோசை
குழந்தை மனம்
மரகதவல்லி

மகாத்மா காந்தி – சுயசரிதை
மல்லிகை மாலை
மால்கோஷ்
திருப்புகழ் பாராயணத் திருமுறை
திருப்புகழ் விருத்தியுரை
திராவிட வேதத் திரட்டு
தேசிங்கு ராஜன்
ஷண்முக விஜயம்
ஷண்முகசுந்தரம்
விஷ விருக்ஷம்
உல்லாஸ வேளை — S. V. V.
புதுமாட்டுப் பெண் ,,
ஸம்பத்து ,,
வஸந்தன் ,,
வாழ்க்கையே வாழ்க்கை ,,
புஷ்பஹாரம்
தங்கம்மாள்
மாதவீகங்கணம்
இராமாயண ஸாரம்
பாரத ஸாரம்
பாகவத ஸாரம்
நால்வர் சரித்திரம்
லோகமான்ய பால கங்காதர திலகர்
பஞ்சால சிங்கம் லாலா லஜபதிராய்
பண்டித மதன்மோகன் மாளவ்யா
கைத்தொழில் அரசர் J.N. டாடா
புக்கர் வாஷிங்டன்
மஹாதேவ கோவிந்த ரானடே
ஜனாதிபதி ரூஸ்வெல்ட்
மார்ஷல் ஸ்டாலின்
ராஷ்ட்ரபதி ஆஸாத்
பண்டிட் ஜவாஹர்லால் நேரு
பாபு ராஜேந்திரப் பிரசாத்
கவியரசி ஸரோஜினி தேவி
பண்டித ரமாபாய் சரஸ்வதி

எங்களிடம் இன்னும் பல நூல்களும் கிடைக்கும். புத்தக ஜாப்தாவுக்கும், பிரதி மாதமும் வெளிவரும் நூல்களுக்கும் எழுதிக்கொள்ளவும்.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை